வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 01 | 12.05.2021 புதன்கிழமை | இதழ் : 161 | பக்கங்கள் : 16






## பெரும் இராணுவ பிரசன்னத்துடன் பௌத்தமயமானது குருந்தூர்மலை!

* புத்த பகவானின் சிலை நிறுவப்பட்டது
* வீதிகளில் ஆயுதங்களுடன் இராணுவம்
* தமிழரின் நாளாந்த பணிகளுக்கு தடை
* நிகழ்வில் சிங்கள மக்களும் பங்கேற்பு

முல்லைத்தீவு, மே 12

வீதிகள்தோறும் ஆயுதம் ஏந்திய படையினர் பாதுகாப்பு வழங்க சைவத் தமிழ் மக்களின் பாரம்பரிய பூமியான குருந்தூர்மலை பௌத்த வழிபாட்டு இடமாக மாற்றப்பட்டது. இதன்போது புத்தர் சிலை ஒன்றும் நிறுவப்பட்டுள்ளதாக நமது செய்தியாளர் தெரிவித்தார்.

மேலும், இந்நிகழ்வில் நூற்றுக்கணக்கான இராணுவத்தினர், 30 பௌத்த தேரர்கள், தொல்லியல் திணைக்களத்தினர் மணலாறில் (வெலிஓயா)

15

# கொரோனா வைரஸ் தடுப்பில் ராஜபக்ஷ அரசுக்கு படுதோல்வி

## முருதெட்டுவே ஆனந்த தேரர் சாடல்



கொழும்பு, மே 12

“கொரோனா வைரஸ் நிலைமைகளைக் கையாள்வதில் ராஜபக்ச அரசு படுதோல்வியடைந்துள்ளது. தகுதியான சுகாதார அதிகாரிகளை ஓரங்கட்டிவிட்டு இராணுவமும், தகுதி இல்லாத அதிகாரிகளும், அமைச்சர்களும் அரச நிர்வாகத்தைக் கையில் எடுத்துள்ள காரணத்தால் இந்தியாவின் நிலையொன்று இலங்கைக்கும் ஏற்படும் அச்சம் உள்ளது.”

15

## வடக்கில் மேலும் 55 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று

### யாழில் 35 பேர் அடையாளம்

யாழ்ப்பாணம், மே 12

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 35 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் மேலும் 55 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை நேற்று கண்டறியப்பட்டுள்ளது என மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

”யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடம் மற்றும் பல்கலைக்கழக ஆய்வு கூடங்களில் ஆயிரத்து 18 பேரின் மாதிரிகள் நேற்று பி.சி.ஆர். பரி

15

## நேற்றும் 23 பேர் சாவு கொரோனா காவு 850

கொழும்பு, மே 12

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான 23 பேர் நேற்று உயிரிழந்துள்ளனர்.

சுகாதார அமைச்சின் தொற்று நோயி

15

## 7 பேரின் விடுதலை சாத்தியமா? ஸ்டாலின் முக்கிய ஆலோசனை

சென்னை, மே 12

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தி கொலை வழக்கில் 27 வருட காலமாக சிறைத் தண்டனை அனுபவித்துவரும்

15

## இரவில் ஊரடங்கை அமுல்படுத்த முடிவு

### ஜனாதிபதியின் அனுமதிக்காகக் காத்திருப்பு

கொழும்பு, மே 12

இலங்கையில் நாள்தோறும் இரவு நேரங்களில் தனிமைப்படுத்தல் ஊரடங்கை அமுல்படுத்த அரசு தீர்மானித்துள்ளது எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

அதற்கமைய இரவு 11 மணி முதல் அதிகாலை 4 மணி வரை ஊரடங்கை அமுல்படுத்த அரசின் கொரோனாத் தடுப்புக்கான செயலணி முடிவெடுத்துள்ளது என அறியமுடிந்தது.

ஜனாதிபதியின் அனுமதி கிடைத்தவுடன் ஊரடங்கு உத்தரவு அமுலாகும் தினத்தை அரசு அறிவிக்கவுள்ளது எனவும்

15

## மே 18 ஐ இனப்படுகொலை நாளாகவும் செபநாளாகவும் அனுஷ்டிக்கவேண்டும்

### வடக்கு-கிழக்கு ஆயர் மன்றம் அழைப்பு


யாழ்ப்பாணம், மே 12

இழைக்கப்பட்ட குற்றங்களுக்கு நீதி கேட்டுப் போராடும் மக்களோடு இணைந்து வடக்கு - கிழக்கு ஆயர்களாகிய நாம் மே 18ஆம் திகதியை இனப்படுகொலையை நினைவுகூரும் நாளாகவும் செபநாளாகவும் அனுசரிக்கும்

15




## அடங்க மறுக்கும் கொரோனா நேற்றும் 2,530 பேருக்கு உறுதி



கொழும்பு, மே 12

இலங்கையில் நேற்று 2 ஆயிரத்து 530 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இதையடுத்து கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு இலட்சத்து 31 ஆயிரத்து 60 ஆக அதிகரித்துள்ளது.

கொரோனாத் தொற்றிலிருந்து ஒரு இலட்சத்து 6 ஆயிரத்து 641 பேர் குணமடைந்துள்ளனர் எனவும், 23 ஆயிரத்து 569 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் அரச தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## இப்படியும் நடக்கிறது...!

திரும்பத் திரும்ப இந்த முதலமைச்சர் வேட்பாளர் விவகாரத்தை எழுதக்கூடாது என்று நினைத்தாலும், நண்பர்கள் விடுவதாக இல்லை. லண்டனிலிருந்து ஒருவர் எப்படியோ இந்த ஊர்க்குருவியை அடையாளம் கண்டு, தொலைபேசி இலக்கத்தையும் தேடிப்பிடித்து தொடர்புகொண்டார்.

"உங்கட ஈழநாடு குழுமத் தலைவருக்கு ஏன் ஐசே இந்த விசர் வேலை?" - தன்னை அடையாளப்படுத்தி விட்டு அவர் முதன் முதலில் கேட்டது இந்தக் கேள்வியைத்தான்.

எனக்கு ஒன்றும் புரியவில்லை. "அவர் செய்யிறது எல்லாமே விசர் வேலைதானே, நீங்கள் எந்த விசர் வேலையைச் சொல்லுறியள்?" என்று நானும் பதிலுக்கு கேள்வியைக் கேட்டேன். (ஈழநாடு குழுமத் தலைவர் மன்னிப்பாராக)

'இந்த மறவன்புலவு சச்சிதானந்தத்தை முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிடச் சொல்லி கேட்டாராம்' என்றார் அவர்.

மறவன்புலவு சச்சிதானந்தம் ஊடகம் ஒன்றுக்கு அண்மையில் வழங்கிய பேட்டி ஒன்றில், தன்னை முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிடுமாறு பலரும் கேட்டுவருகின்றனர் எனத் தெரிவித்திருந்ததுடன், அவர்களில் இருவர் முக்கியமானவர்கள் என்றும், ஒருவர் 'ஈழநாடு' குழுமத் தலைவர் குகநாதன் என்றும் தெரிவித்திருந்தார்.

அந்த விடயத்தைத்தான் இந்த லண்டன் நண்பர் 'விசர்' வேலை என்று விமர்சித்திருந்தார்.

அண்மையில் இலங்கையையே அல்லோலகல்லோலப்படுத்திய அந்தச் செய்தி பற்றி இந்தப் பத்தியில் ஏற்கனவே குறிப்பிட்டிருந்தோம்.

பாரதிய ஜனதா கட்சியின் அடுத்த இலக்கு நேபாளத்திலும், இலங்கையிலும் ஆட்சி அமைப்பதுதான் என்று இந்திய உள்துறை அமைச்சரும், பாரதிய ஜனதாக் கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவருமான அமித்ஷா தெரிவித்தாரென வெளிவந்த அந்தச் செய்தி தெரிவித்திருந்தது.

பாராதிய ஜனதா கட்சி ஆட்சி அமைப்பது என்பது, அதன் கொள்கையைக் கொண்டவர்கள் ஆட்சி அமைப்பதைத்தான் குறிக்கும் என்பது தெரிந்ததே.

இந்திய அரசியல் கட்சி ஒன்று நேரடியாக ஒரு வெளிநாட்டில் ஆட்சி அமைக்க முடியாது என்பது அமித்ஷா அறியாததல்ல. அவர் சொன்னது தமது கொள்கையைக் கொண்டவர்கள் ஆட்சி அமைப்பதைத்தான் என்று விளங்கிக்கொள்ள வேண்டும். இந்த செய்தி வெளிவந்த சில மாதங்களில் மறவன்புலவு சச்சிதானந்தம் முதலமைச்சராக போட்டியிட விருப்பம் தெரிவித்திருக்கும் செய்தி வெளிவந்திருக்கின்றது.

கனடாவிலிருந்து வெளிவரும் உலகத் தமிழர் என்ற பத்திரிகையும் இந்த இரண்டு செய்திகளையும் ஒன்றுசேரப் பார்த்து செய்தி விமர்சனம் ஒன்றை அண்மையில் வெளியிட்டுள்ளது.

லண்டனிலிருந்த அந்த அன்பர் பேசுவதற்கு முன்னரே, இது தொடர்பாக ஊர்க்குருவி, ஈழநாடு குழுமத்தின் தலைவர் குகநாதனுடன் இந்தச் செய்தி தொடர்பாக பேசியிருந்தது. அப்போது அவர் சில விடயங்களை உறுதிசெய்தார்.

ஏற்கனவே இரண்டாயிரத்துப் பதின்மூன்றில் வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடைபெறவிருந்தபோது, கூட்டமைப்பு வேட்பாளராக விக்னேஸ்வரன் பெயர் பிரஸ்தாபிக்கப்பட்ட காலத்தில், விக்னேஸ்வரனை எதற்காகக் கொண்டு வரவேண்டும் என்று அவர் சார்பில் வலியுறுத்தியவர்கள் கூறினார்களோ, அதைவிடப் பல சிறப்புக்களை சச்சிதானந்தன் கொண்டிருந்தார் என்றும், அப்போது அவர் ஏன் போட்டியிடக்கூடாது என்பதை அவரிடமே கேட்டாகவும் குகநாதன் தெரிவித்தார்.

இதனால், அந்த லண்டன் அன்பருடன் இது விடயமாக இன்னும் விபரமாக 'சண்டையிட' முடிந்தது. சச்சிதானந்தம், தற்போது ஒரு சர்ச்சைக்குரியவராக பார்க்கப்படுவது, அவர் சைவத்தை பாதுகாக்கவேண்டும் என்று அண்மைக்காலமாக எடுத்துவரும் நடவடிக்கைகள்தான். அந்த விடயத்தைத் தவிர்த்துப் பார்த்தால், சச்சிதானந்தனின் பல்வேறு சிறப்புக்களை பட்டியலிடலாம்.

இந்தியத் தலைவர்களோடு- பாரதிய ஜனதா தலைவர்கள் மாத்திரமன்றி, ஏன் காங்கிரஸ் தலைவர்களோடும் அவருக்கு நெருக்கமான தொடர்பும் நட்பும் உண்டு. இன்று இந்தியாவின் உதவியின்றி தமிழர்கள் எத்தகையை தீர்வையும் பெறமுடியாது என்பது தெரிந்துவிட்ட பின்னரும், அந்த இந்தியாவுடன் நெருக்கமான தொடர்பைக் கொண்டிருக்கின்ற ஒருவர் நமது அரசியலுக்கு அவசியம். அதற்காக அவர் முதல்வராக வேண்டும் என்பதல்ல, அவரை நமது தலைவர்கள் குறைந்தபட்சம் பயன்படுத்தவாவது வேண்டும்.

இந்த விடயங்களை அந்த அன்பருடன் விவாதித்த பின்னர், அவர் சற்று தொனியை மாற்றிக்கொண்டு சொன்னார்,

'விக்னேஸ்வரன் அண்மையில் வேலன் சுவாமியை பொதுவேட்பாளராக நிறுத்தவேண்டும் என்று சொல்லியிருந்தார். வேலன் சுவாமி போட்டியிடலாம் என்றால், இந்த சச்சிதானந்தன் போட்டியிட்டால்தான் என்ன?'

தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழு உறுப்பினரான சச்சிதானந்தன், தந்தை செல்வா காலத்திலிருந்து தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் இயங்கிக்கொண்டிருப்பவர்.

கிறிஸ்தவ மதக்குழு ஒன்றின் உபதலைவராக பணியாற்றிய ஒருவர், கூட்டமைப்பின் அனைத்து முடிவுகளையும் எடுக்கின்ற ஒருவராக இருக்கமுடியுமென்றால், சைவ சமயத்தைப் பாதுகாக்க நினைக்கின்ற ஒருவர் ஏன் முதல்வராக முடியாது என்று கேட்காமல் இருக்கவும் முடியவில்லை.!

**- ஊர்க்குருவி.**

# நல்லூர் பிரதேச சபை கூட்டத்தில் மே 18ஐ நினைவுகூர கோரிக்கை!

யாழ்ப்பாணம், மே 11

மே 18ஆம் நாள் நல்லூர் பிரதேச சபையின் விசேட கூட்டத்தை கூட்டி முள்ளிவாய்க்கால் நினைவுகூரலை நடத்துவதற்கு அந்த சபையின் உறுப்பினர் கு. மதுசுதன் பிரேரித்துள்ளார்.

நல்லூர் பிரதேச சபையின் மாதாந்த அமர்வு நேற்று தவிசாளர் ப. மயூரன் தலைமையில் நடந்தது. இதன்போது உரையாற்றிய சபை உறுப்பினர் கு. மதுசுதன்,

மே-18 அண்மித்துவிட்டது. எங்கள் உறவுகள் கொத்துக் கொத்தாக கொன்றொழிக்கப்பட்ட நாள். இன்று (நேற்று) மே-11. இந்த நாட்களில் முள்ளிவாய்க்காலிலும், வன்னிப் பெருநிலப் பரப்பிலும் எங்கள் உறவுகள் வகை தொகையின்றி கொன்றொழிக்கப்பட்டனர். இந்த மாதத்தில் நாங்கள் வழமையாக ஒன்றுகூடி நினைவு கூருவதுண்டு.

எனவே, மே-18 அன்று நல்லூர் பிரதேச சபையின் விசேட கூட்டத்தைக் கூட்டி நினைவஞ்சலியை நிகழ்த்துவதற்கு நான் பிரேரிக்கிறேன் என்றார்.

மேலும், எங்கள் உள்ளக் குமுறல்களை வெளிப்படுத்தி அமைதியான முறையில், எங்கள் சபையில் மே-18 நாளை நாங்கள் நினைவுகூர வேண்டும் என்பதை இந்தச் சபையின் தாழ்மையான கவனத்துக்கு கொண்டு வருகின்றேன். இதனை, எங்கள் இனம் சார்பான கோரிக்கையாக விசேட கூட்டத்தை நினைவு அஞ்சலிக் கூட்டமாக கூட்ட வேண்டும் என அன்புடன் கோரிக்கை விடுக்கின்றேன் என்றும் சொன்னார்.

இதைத் தொடர்ந்து, நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் பத்மநாதன் மயூரன் பதிலளிக்கையில், உறுப்பினர் மதுசுதன் குறிப்பிட்ட விடயம் தொடர்பில் தீர்மானமொன்றை எடுத்த பின்னர் பதில் வழங்குகின்றேன் எனக் கூறினார். (ஐ-3)

## சினோபார்ம் தடுப்பூசி ஏற்றல் கொழும்பில் ஆரம்பம்!



கொழும்பு, மே 12

சினோபார்ம் தடுப்பூசி ஏற்றும் பணிகள் நேற்று கொழும் பில் ஆரம்பமானது. இராணுவத்தினர் மூலம் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதற்கமைய கொழும்பின் பல்வேறு இடங்களிலும் இராணுவ மருத்துவர்கள், தாதியர்கள் பொதுமக்களுக்கு தடுப்பூசிகளை ஏற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். (ஐ)

## தொற்று அதிகரிப்பின் எதிரொலி

# மட்டக்களப்பில் மாலையுடன் வர்த்தக நிலையங்கள் பூட்டு!

மட்டக்களப்பு, மே 12

மட்டக்களப்பில் அத்தியாவசிய விற்பனை நிலையங்கள் தவிர்ந்த ஏனைய வர்த்தக நிலையங்களை மாலை 6 மணியுடன் மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் தெரிவித்தார்.

நேற்று மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நடந்த கொரோனா செயலணி கூட்டத்தைத் தொடர்ந்து நடந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்திற்குள் வருபவர்களையும் இங்கிருந்து செல்பவர்கள் தொடர்பில் அத்தியாவசிய சேவை தவிர்ந்து ஏனையவர்களை அனுமதிப்பதில்லையெனவும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாகவும் அரசாங்க அதிபர் தெரிவித்தார். (ஐ)

# பொலிஸாரின் விடுமுறைகள் உடன் இரத்து!



கொழும்பு, மே 12

நாட்டில் நேற்று நள்ளிரவு முதல் எதிர்வரும் 31ஆம் திகதி வரை அனைத்து பொலிஸ் அதிகாரிகளின் விடுமுறைகளும் இரத்துச் செய்யப்படுகின்றன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

அத்தோடு தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் வசிக்கும் பொலிஸ் அதிகாரிகள், தனிமைப்படுத்தல் உத்தரவு நீக்கப்படும் வரையில் கடமைக்குச் சமுகமளிக்கத் தேவையில்லை என்றும் அவர் நேற்று கூறியுள்ளார்.

நேற்று நள்ளிரவு முதல் மாகாணங்களுக்கு இடையே பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ள நிலையில் இது குறித்த விளக்கம் அளிக்கும் செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (இ)

கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்

**பகல்**

12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள்

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
12.05.2021 புதன்கிழமை
பிலவ வருடம், சித்திரை 29

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
**தொலைபேசி : 021 730 1370**

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் - 2021

யுத்தத்தில் உயிழந்த மக்களை நினைவு கூருவது அரச தரப்பை பொறுத்தவரையில் எப்போதுமே விருப்புக்குரிய விடயமல்ல. ஆனால், நல்லாட்சி அரசாங்கமாக தங்களை நிறுவிக்கொள்ள முற்பட்ட ரணில் - மைத்திரி அரசாங்கம், இதில் சில நெகிழ்வுகளை கடைப்பிடித்திருந்தது. ஆட்சி மாற்றத்தில் தமிழ் மக்களின் பங்களிப்பு பிரதானமாக இருந்தமையும் இதற்கு ஒரு காரணம். ரணில் அரசாங்கத்தில் அங்கம் வகித்தவர்கள் அனைவருமே இதனை ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் கூட, மேல்மட்டத்தில் இருந்தவர்கள் நினைவு கூருதல்மீதான கட்டுப்பாடுகளை தளர்த்துவதற்கு உடன்பட்டிருந்தனர். 2009இல் யுத்தம் முடிவுற்றதற்கு பின்னர், முதல் முதலாக, விடுதலை புலிகளின் மாவீரர் துயிலுமில்லங்களிலும் நினைவுகூரல் இடம்பெற்றது. இவ்வாறான விடயங்கள் பிறிதொரு புறமாக ராஜபக்ஷக்களின் செல்வாக்கு தென்னிலங்கையில் அதிகரிப்பதற்கும் காரணமாகியது. சிங்கள தேசியவாத தரப்புக்களை ஓரணிப்படுத்துவதிலும் இவ்வாறான நிகழ்வுகள் மறைமுகமாக செல்வாக்குச் செலுத்தின.

ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் அணுகுமுறை, அடிப்படையிலேயே வித்தியாசமானது. ஒரு விடயத்தை தடுக்கும்போது அதன்மீது ஏற்படும் ஈர்ப்புக்கும், அதனை கண்டும் காணாமால் விடுகின்றபோது, அதன்மீது ஏற்படும் ஈர்ப்பிற்குமிடையில் அடிப்படையிலேயே வேறுபாடுண்டு. இந்த வேறுபாட்டில்தான் ரணில் விக்கிரமசிங்கவின் அணி கவனம் செலுத்தியிருந்தது. ரணில் விக்கிரமசிங்கவை பொறுத்தவரையில், யுத்தம் தொடர்பான விவகாரங்கள் அவரின் அரசியலுக்கு பெயரியளவில் பயன்படாது. இதனால் அவர்களை பொறுத்தவரையில், நினைவு கூருதல் விவகாரம் பாரதூரமான பிரச்னையாக இருக்கவில்லை.

ஆனால், யுத்த வெற்றியை எப்போதும் தங்களின் வாக்கு வங்கிக்கு பயன்படுத்திக்கொள்ள முடியுமென்று நம்பும், அதனடிப்படையில் கணக்குப்போடும், ராஜபக்ஷக்களுக்கோ, நினைவு கூருதல் அவர்களின் அடிமடியில் கைவைக்கும் பாரதூரமான பிரச்னை. இந்த பின்புலத்திலேயே நினைவு கூருதல் விடயத்தில் மீளவும் கட்டுப்பாடுகளை விதித்தனர். அதனை முற்றிலுமாக தடுப்பதிலேயே கவனம் செலுத்துகின்றனர்.

தற்போது நாடு மீளவும் கொரோனாவின் பிடிக்குள் சிக்குண்டிருக்கின்ற சூழலில், முள்ளிவாய்க்கால் நிகழ்வுகள் முற்றிலும் தடை செய்யப்பட்டிருக்கின்றன. இராணுவத் தளபதி சவேந்திர சில்வா, முள்ளிவாய்க்கால் நிகழ்வுகளை மேற்கொள்ள முற்படுபவர்கள் எவராக இருப்பினும், அவர்கள் கைது செய்யப்படுவார்களென எச்சரித்திருக்கின்றார்.

தற்போதுள்ள நெருக்கடி நிலைமையின்கீழ், அவ்வாறு கைதுசெய்யப்பட்டாலும்கூட, அதனை ஓர் அரசியல் விவகாரமாக தமிழர் தரப்புக்களால் காண்பிக்கமுடியாது. அதேவேளை, சாதாரண தமிழ் மக்கள்கூட, இதனை அனுதாபத்துடன் நோக்க மாட்டார்கள். எனவே, தமிழர் அரசியல் தரப்புகள், நிலைமைகளை கவனமாகக் கையாள வேண்டும். தமிழர்கள் சமூக பொறுப்பற்றவர்கள் என்றவாறான பார்வையை ஏனையவர்களுக்கு வழங்கிவிடாத வகையில், இந்த விடயம் அணுகப்படவேண்டும்.

மாற்று வழிகளிலும், அமைதிக்கு குந்தகமில்லாத வகையிலும், நினைவு கூருதலை எவ்வாறு முன்னெடுக்கலாம் என்பது தொடர்பிலேயே, தமிழர் தரப்புக்கள் சிந்தித்து செயல்படவேண்டும். வீடுகளில் நினைவு கூருவதில் தங்களுக்கு ஆட்சேபனை இல்லையென்றும் அரசாங்கம் தெரிவித்திருக்கின்றது. தற்போதுள்ள நிலையில், வீடுகளில் அமைதியாக நினைவுகூருவதுதான் சரியானது. வழமைபோல் முள்ளிவாய்க்காலை அரசியலாக்கும் அணுகுமுறைகளை தமிழ் அரசியல் குழுக்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டும். ஆகக் குறைந்தது, இதிலாவது ஒற்றுமையை பேண முயற்சிக்கவேண்டும்.

# சுனாமி தாக்கிய வேளையில் பில் கிளின்டன் கூறியது!

- அலசுவது **இராஜதந்திரி** -

இலங்கையில் மாத்திரமல்ல, இன்று உலகம் முழுவதிலுமே சகல ஊடகங்களும் கோவிட்-19 வியாதியின் தாக்கம் குறித்த செய்திகள், தகவல்களுக்கே தினந்தோறும் முக்கியத்துவமளித்துவருகின்றன.

முழு உலகையுமே அச்சுறுத்தி கோரத் தாண்டவமாடிவரும் வியாதியாக கோவிட் -19 விளங்குகின்றது.

இலங்கையின் அயல் நாடான இந்தியா, கோவிட் -19 வியாதியினால் பெரிதும் பாதிக்கப்பட்ட நிலையில் அங்கே வைத்தியசாலைகளில் கோவிட்-19 நோயாளிகளும், மயானங்களில் கோவிட்-19 வியாதிகளால் பாதிக்கப்பட்டு இறந்தவர்களது சடலங்களும் நிரம்பி வழிவதாகத்தெரிவிக்கப்படுகிறது.

முழு உலகுக்குமே அச்சுறுத்தல் விடுத்துள்ள இக்கொடிய வியாதி காரணமாக இவ்வியாதியை ஒரு பொது எதிரியாகவே மானிட குலம் சகல வேறுபாடுகளையும் தவிர்த்து கருதியுள்ளது.

கொடிய கோவிட்-19 வியாதி ஏற்படுத்திய தாக்கத்தையடுத்து உள்நாடுகளில் மட்டுமல்ல, சர்வதேச ரீதியாகவும் அரசியல் சார்ந்த பிரச்னைகள் பின்தள்ளப்பட்டுள்ளதையே காணமுடிகின்றது.

அனைத்து மக்களும் பொது எதிரியான கோவிட்-19 வியாதியின் அச்சுறுத்தலிலிருந்து எவ்வாறு தப்பிக்கொள்ளலாம் என்றே எண்ணியவர்களாக இருக்கின்ற நிலையில், அரசியல் ரீதியான பிரச்னைகளை பெருமளவு புறந்தள்ளியுள்ளவர்களாக இருக்கின்றனர்.

எல்லோருமே கோவிட் நோய்த்தடுப்பு பற்றியே சிந்தித்தவர்களாக இருக்கின்றனர்.

**சுனாமி தாக்கம்**

இத்தருணத்திலேயே 2004ஆம் ஆண்டு டிசம்பர் மாத்தில் இலங்கை உட்பட தென்னாசிய நாடுகள் பலவற்றின் கரையோரங்கள் பலவற்றையும் தாக்கி ஏராளமான உயிரழிவை ஏற்படுத்திய சுனாமிப்பேரலை நினைவுக்கு வருகின்றது.

இந்தோனேசியாவில் ஏற்பட்ட கடலுக்கடியிலான பூமியதிர்ச்சி காரணமாகவே அன்று சுனாமி பேரலை கடலில் தோற்றம்பெற்று, இலங்கை உட்பட தென்னாசிய கரையோரங்கள் பலவற்றையும் தாக்கி பெரும் சேதங்களை ஏற்படுத்திவிட்டிருந்தது.

சுனாமி பேரலை தாக்கத்தையடுத்து உலக நாடுகள் பலவும் பாதிப்புற்ற நாடுகளுக்கு உதவுவதில் முன்னின்றன.

இலங்கைமீது ஏராளமான நாடுகள் தமது அனுதாபத்தை வெளியிட்டிருந்தன. முன்னாள் அமெரிக்க ஜனாதிபதிகளான ஜோர்ஜ் புஷ், மற்றும் பில் கிளின்டன் ஆகியோர் இலங்கைக்கு விஜயம் செய்து, சுனாமிப் பேரலையினால் பாதிக்கப்பட்ட மக்களை நேரடியாகவே சந்தித்து ஆறுதலளித்திருந்தனர். இந்த இரு முன்னாள் அமெரிக்க ஜனாதிபதிகளும் சுனாமி அவலத்தை பார்க்க இலங்கை வந்ததோடு, நிவாரணப் பணிகளையும் உன்னிப்பாக அவதானித்திருந்தனர்.



**பில் கிளின்டன்**

இதன்பின்னர் முன்னாள் பில் கிளின்டன் தனியாக இலங்கைக்கு வந்து, சுனாமி நிவாரணப் பணிகளின் முன்னனேற்றத்தை அவதானித்திருந்தார். அப்போது அவர் கொழும்பு டிரான்ஸ் ஏசியா ஹோட்டலில் பத்திரிகையாளர் மகாநாடொன்றை நடத்தியிருந்தார். அச்சமயம் அவர் குறிப்பிட்டவை, அரசியல் பிரச்னையால் குறிப்பாக, அன்று வடக்கு-கிழக்கின் உள்நாட்டு யுத்தத்தினால் துவண்டு போயிருந்த இலங்கையர்களுக்கு ஒரு பொது எதிரியான சுனாமி பேரலை ஏற்படுத்திய தாக்கத்தை கையாளும்போது, நாம் காண்பிக்கின்ற ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் எவ்வாறு எம்மைப் பாதிக்கின்ற அரசியல் பிரச்னைகளை கையாளுவதற்கு பிரயோகிக்க முடியும் என்று குறிப்பிட்டிருந்தார்.

அச்சமயம் முன்னாள் ஜனாதிபதி பில் கிளின்டன் குறிப்பிட்ட ஒற்றுமையின் அவசியம். தற்போதைய சூழலிலும் பொருத்தமானதாகவே இருக்கின்றது.

வடக்கு-கிழக்கின் பெரும்பாலான பகுதிகள் சுனாமி பேரலையினால் பாதிக்கப்பட்ட நிலையில் அன்று தமிழீழ விடுதலைப் புலிகளும் அப்போது சுனாமி அனர்த்தத்தின் நிலைமைகளை கையாளுவதில் பெரும் சிரமங்களை எதிர் நோக்கிய நிலையில், ஜனாதிபதி பில் கிளின்டன் தமிழீழ விடுதலைப் புலிகளையும், இலங்கை அரசையும் ஒன்றாக முன்வந்து, பொது எதிரியான சுனாமி அனர்தத்தை கையாள்வதில் காண்பிப்பதுபோல தமக்கிடையிலான அரசியல் வேறுபாடுகளையும் நீக்குவதற்கு ஒன்றாக முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டிருந்தார்.

எனவே, தற்போதைய சூழலிலும்கூட பொது எதிரியான கோவிட்-19 வியாதியை ஒரு பொது எதிரியாக கணித்து, சகல அரசியல் தரப்பினரும் அதனை எதிர் கொள்வதில் பொதுவான கரிசனையை தம்மிடையேயான அரசியல் வேற்றுமைகளை நீக்கவும் வெளிப்படுத்த முடியுமென்றே கருதலாம்.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



**மே - 12 புதன்கிழமை**
பிலவ வருடம் - சித்திரை - 29
நல்ல நேரம் : 9.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 1.30
திதி : பிரதமை




**12.05.2021**

**மேடம்**
விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை வைக்கும் நாள். வாழ்கைத்தரம் உயரும். தொழில் ரீதியாக எடுத்த முயற்சி வெற்றி பெறும். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற வேண்டுமென்ற எண்ணம் மேலோங்கும்.

**இடபம்**
ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள். தொலைபேசி வழித்தகவல் ஆச்சரியமளிக்கும். தந்தை வழி உறவில் ஏற்பட்ட மனக்கசப்புகள் மாறும். வளர்ச்சிக்கு குறுக்கீடாக இருந்தவர்கள் விலகுவர்.

**மிதுனம்**
புண்ணிய காரியத்திற்கு பொருளுதவி செய்யும் நாள். வாகனங்கள் சம்பந்தப்பட்ட வகையில் திடீர் செலவுகள் ஏற்படலாம். தொழில் இரகசியங்களை வெளியில் சொல்லாதிருப்பது நல்லது.

**கடகம்**
சந்தித்தவர்களால் சந்தோஷம் அதிகரிக்கும் நாள். பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சி வெற்றி பெறும். திருமணப் பேச்சுகள் கைகூடும். இடம், பூமியால் லாபம் உண்டு.

**சிம்மம்**
பரவசப்படுத்தும் நாள். வழிபாடுகளில் அதிக நம்பிக்கை வைப்பீர்கள். பணியாளர்கள் தொல்லை அகலும். உடல் நலம் சீராக மாற்ற மருத்துவத்தை மேற்கொள்வது நல்லது.

**கன்னி**
இடையூறுகள் அகல இறைவழிபாட்டை மேற்கொள்ள வேண்டிய நாள். நட்பு பகையாகாமல் பார்த்துக் கொள்வது நல்லது. விலை உயர்ந்த பொருட்களை கவனமுடன் கையாள்வது உகந்தது.

**துலாம்**
அரசியல் ஈடுபாடு அதிகரிக்கும் நாள். அதிகாலையிலேயே வரவு வந்து சேரும். நிகழ்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதில் ஆர்வம் காட்டுவீர்கள். வாங்கல் கொடுக்கல்கள் ஒழுங்காகும்.

**விருட்சிகம்**
முன்னேற்றம் கூட முன்னோர்களை வழிபட வேண்டிய நாள். எண்ணிய எண்ணம் எளிதில் நிறைவேறும். தொழிலில் புதிய பங்குதாரர்கள் வந்திணைவர். வருமானம் போதுமானதாக இருக்கும்.

**தனுசு**
காலை நேரத்திலேயே கலகலப்பான செய்தி வந்து சேரும் நாள். ஊக்கத்தோடும், உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள். விவாகப்பேச்சுகள் முடிவாகலாம். கேட்ட இடத்தில் உதவி கிடைக்கும்.

**மகரம்**
யோகனமான நாள். முக்கியப் புள்ளிகளால் ஆதாயம் உண்டு. ஆரம்பத்தில் அச்சுறுத்தலாக தோன்றிய தகவல் முடிவில் அனுகூலத்தைக் கொடுக்கும். உடல்நலம் சீராகி உற்சாகப்படுத்தும்.

**கும்பம்**
விரயங்கள் குறைய விழிப்புணர்ச்சியுடன் செயல்பட வேண்டிய நாள். தொழிலில் சில மாற்றங்களைச் செய்ய முன்வருவீர்கள். குடும்பப் பெரியவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது.

**மீனம்**
அதிர்ஷ்ட வாய்ப்புகள் அலைமோதும் நாள். மதிப்பும், மரியாதையும் உயரும். பரபரப்பாகச் செயல்பட்டுப் பாராட்டுப் பெறுவீர்கள். வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும். வருமானம் திருப்தி தரும்.

# சென்னை வந்து செல்லும் 126 விமானங்கள் ரத்து! 8 பேருடன் அமெரிக்காவிலிருந்து வந்த விமானம்

## ஊரடங்கால் வெறிச்சோடிய சென்னை விமான நிலையம்

சென்னை, மே 12

கொரோனா வைரஸ் இரண்டாவது அலையை கட்டுப்படுத்த மாநிலம் முழுவதும் திங்கட்கிழமை முதல் வரும் 24 ஆம் திகதி வரை தமிழக அரசு முழு ஊரடங்கை அமுல்படுத்தியுள்ள நிலையில், சென்னைக்கான விமான சேவைகளும் வெகுவாகக் குறைந்துள்ளன.



உள்நாட்டு விமான பயணிகள் அவசர வேலைகளுக்காக பயணிக்கலாம் என்று விதிவிலக்கு அளிக்கப்பட்டு உள்ளது. என்றாலும் பயணிகள் பலர் கொரோனா காலத்தில் விமானங்களில் பயணிக்க விரும்பவில்லை. இதனால் சென்னை உள்நாட்டு விமான நிலையத்தில் இப்போது உள்நாட்டு விமான சேவைகள் குறைந்துள்ளது.

சென்னையிலிருந்து 38 புறப்படும் உள்நாட்டு விமானங்கள் மட்டுமே இயக்கப்படுகின்றன. அதில் நேற்று 2,400 பயணிகள் மட்டுமே பயணித்தனர். அதைப் போல் சென்னைக்கு வரும் உள்நாட்டு விமானங்கள் 40 இயக்கப்பட்டு, அதில் 1,300 பேர் மட்டும் பயணித்தனர். நேற்றைய தினம்சென்னை உள்நாட்டு விமான நிலையத்தில் மொத்தம் 78 விமானங்களில் 3,700 மட்டுமே பயணித்தனர். நேற்றைய தினம் சென்னை உள்நாட்டு விமான நிலையத்தில் போதிய பயணிகள் இல்லாமல்126 விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன. அதில் சென்னையிலிருந்து வெளி மாவட்டங்கள், மாநிலங்களுக்கு செல்லும் விமானங்கள் 62, சென்னைக்கு வரும் விமானங்கள் 64.

இதுதவிர சென்னை சர்வதேச விமான நிலையத்தில் நேற்றைய தினம் இரண்டு வந்தே பாரத் விமானங்கள், 6 சிறப்பு விமானங்கள் என மொத்தம் 8 விமானங்கள் மட்டுமே வந்தன. அதிலும் அமெரிக்காவின் சிக் காகோ நகரிலிருந்து புதுடில்லி வழியாக சென்னை வந்த ஏர் இந்தியா விமானத்தில் 8 பயணிகள் மட்டுமே வந்ததனரென தெரிகிறது.

# சட்டப்பேரவை கூட்டம் ஆரம்பம் சபாநாயகர் ஏகமனதாக தெரிவு!

சென்னை, மே 12

தமிழக சட்டசபையின் 16ஆவது கூட்டத் தொடர் சென்னையில் உள்ள கலைவாணர் அரங்கில் நேற்று இடம்பெற்றது. இந்த கூட்டத்தில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட எம்.எல்.ஏ.க்கள் பதவியேற்றனர். சட்டப்பேரவை கூட்டத்தில் பங்கேற்க எம்.எல்.ஏக்கள் கலைவாணர் அரங்கத்திற்கு வருகை தந்தனர்.



நேற்று ஆரம்பமான சட்டசபை கூட்டத்தில் தற்காலிக சபாநாயகர் கு.பிச்சாண்டி முன்னிலையில் புதிய எம்.எல்.ஏ.க்கள் பதவியேற்று கொண்டனர். முன்னதாக சட்டசபை தலைவர் பதவிக்கு ராதாபுரம் தொகுதி எம்.எல்.ஏ. அப்பாவு வேட்புமனு தாக்கல் செய்தார், துணைத்தலைவர் பதவிக்கு தி.மு.க. எம்.எல்.ஏ. கு. பிச்சாண்டி வேட்புமனு தாக்கல் செய்தார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு தற்காலிக சபாநாயகர் கு.பிச்சாண்டி எம்.எல்.ஏவாக பதவி பிரமாணம் செய்து வைத்தார். “முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்....” எனக் கூறி எம்.எல்.ஏ பதவி ஏற்றுக் கொண்டார் மு.க. ஸ்டாலின். அவரை தொடர்ந்து அமைச்சர்கள் பதவி ஏற்றுக்கொண்டனர். அதன்பிறகு கட்சிகளின் சட்டசபை தலைவர்கள் பதவி ஏற்று கொண்டனர்.

தொடர்ந்து எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி, “கடவுள் அறிய” எனக் கூறி பதவியேற்றுக் கொண்டார். இதே போல, முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம், சட்டமன்ற கட்சி தலைவர்கள் பதவி யேற்றுகொண்டனர். இதைத் தொடர்ந்து அகர வரிசைப் படி, மற்ற உறுப்பினர்களும் வரிசையாக பதவியேற்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

தமிழகத்தின் 16 ஆவது சட்டப்பேரவையின் சபாநாயகராக ராதாபுரம் தி.மு.க. எம்.எல்.ஏ. அப்பாவு தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

மனு தாக்கல் செய்வதற்கான அவகாசம் 12 மணியுடன் முடிவடைந்த நிலையில் அவரை எதிர்த்து யாரும் போட்டியிட வில்லை என்பதால் அப்பாவு போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டார். அதேபோல் துணை சபாநாயகராக வேறு யாரும் மனு தாக்கல் செய்யாததால் கீழ் பெண்ணாத்தூர் தொகுதி தி.மு.க. எம்.எல்.ஏ. கு.பிச்சாண்டியும் தேர்வு செய்யப்பட்டுள்ளார். இதனைத் தொடர்ந்து சபாநாயகர் மற்றும் துணை சபாநாயகர் நாளை முறைப்படி பதவியேற்கவுள்ளனர்.

# நடிகர் மன்சூர் அலிகான் மருத்துவமனையில்

சென்னை, மே 12

நடிகர் மன்சூர் அலிகான் உடல்நலக் குறைவால் அமைந்தகரையில் உள்ள மருத்துவமனையில் அதிதீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.



சட்டமன்ற தேர்தலில் தொண்டாமுத்தூர் தொகுதியில் மன்சூர் அலிகான் போட்டியிட்டார். அங்கு அவர் சொற்ப வாக்குகள் மட்டுமே பெற்று தோல்வியடைந்தார்.

கல்லீரலில் கல் அடைப்பு ஏற்பட்டு மிகுந்த அவதிப் பட்டுள்ள நிலையிலேயே அவர் மருத்துவமனயில் அனுமதிக்கப்பட்டார். மருத்துவமனையில் அவருக்கு கொரோனா உட்பட அனைத்து பரிசோதனைகளும் நடைபெற்று, அறுவை சிகிச்சைக்கு தயாராகி வருகிறார்.

# 1,070 பட்டாசு ஆலைகள் மூடல்

சிவகாசி, மே 12,

தமிழகத்தின் விருதுநகர் மாவட்டம், சிவகாசியில் இயங்கிவரும் 1,070 பட்டாசு ஆலைகள் முழு ஊரடங்கு அமுல்படுத்தப் பட் டுள்ளதையடுத்த திங்கட்கிழமை முதல் மூடப்பட்டுள்ளன.

இதுகுறித்து பட்டாசு ஆலை உற்பத்தியாளர் ஒருவர் கூறுகையில்,”தமிழக அரசுக்கு முழு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் பட்டாசு ஆலைகளை மூடியுள்ளோம். தீப்பெட்டி உற்பத்தி போலவே, பட்டாசு தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை கருத்தில்கொண்டு 50 சதவீத பணியாளர்களுடன் உற்பத்தியை மேற்கொள்ள அரசு அனுமதிக்க வேண்டும். தமிழக அரசு பட்டாசு தொழிலாளர்களுக்கு நிவாரணத்தொகை வழங்க வேண்டும்” என்றார்.

# அரசாங்கத்தின் மீது மக்கள் நம்பிக்கை இழந்துள்ளனர்

## ஜே.வி.பி. குற்றச்சாட்டு



கொழும்பு, மே. 12

**கொரோனா தொற்று தொடர்பாக அரசாங்கத்தால் வழங்கப்பட்ட தரவு மற்றும் தகவல்களில் இருந்த நம்பிக்கையை பொதுமக்கள் இழந்து விட்டதாக மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.**

கட்சி அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே அந்தக் கட்சியின் தலைவர் அனுர குமார திஸாநாயக்க இதனைத் தெரிவித்தார்.

மேலும் கொரோனா கட்டுப்பாடு தொடர்பான பொறிமுறையில் சுகாதாரத் துறைக்கு முன்னுரிமை அளிக்கப்படவேண்டும் என்றாலும், மற்ற தரப்பினருக்கே அரசாங்கம் முன்னுரிமை கொடுப்பதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

எனவே, கொரோனா தொற்றால் ஏற்படும் ஆபத்திலிருந்து நாட்டைக் காப்பாற்றத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என்றும் அனுர குமார திஸாநாயக்க கேட்டுக்கொண்டார்.

அந்தவகையில் கொரோனா கட்டுப்பட்டு செயலணி உடனடியாக மறுசீரமைக்கப்பட வேண்டும் என குறிப்பிட்ட அவர், நாட்டில் பரவும் கொரோனா தொற்றுக்கு அரசாங்கத்தின் அலட்சியம் மற்றும் தவறான முடிவுகளே காரணம் என்றும் குறிப்பிட்டார்.

# விசேட அதிரடிப்படையில் புதிய பிரிவு உருவாக்கம்

கொழும்பு, மே. 12

'நீரியல் சுற்றிவளைப்புப் பிரிவு' என்ற பெயரில் பொலிஸ் விசேட அதிரடிப்படையில் மற்றுமொரு பிரிவு நிறுவப்பட்டுள்ளது.

நீர்த்தேக்கங்கள் மற்றும் ஆறுகளில் இடம்பெறும் பல்வேறு சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு எதிராக சட்டத்தை நடைமுறைப்படுத்தும் நோக்கில் இந்த பிரிவு ஸ்தாபிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதற்காக விசேட பயிற்சியளிக்கப்பட்ட விசேட அதிரடிப்படையின் 16 சிப்பாய்கள் இந்த பிரிவில் உள்ளடங்குகின்றனர்.

# நாட்டை உடனடியாக முடக்க வலியுறுத்தும் சஞ்சய பெரேரா

கொழும்பு, மே. 12

கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கத்தினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கு நாட்டை உடனடியாக முடக்குவதே சிறந்த தீர்மானமென மருந்துகள் மற்றும் சுகாதார நிர்வாகம் தொடர்பான பேராசிரியர் மருத்துவ நிபுணர் சஞ்சய பெரேரா தெரிவித்துள்ளார்.

மேலும் நாட்டில் தற்போது பதிவாகும் அன்றாட மரணம் மற்றும் தொற்றுத் தரவை நம்ப முடியாது என அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, எதிர்வரும் காலங்களில் இறப்புகளின் எண்ணிக்கை 20 ஆயிரத்தைக்கூட கடக்கும் வாய்ப்பு உள்ளதுடன் செப்ரெம்பர் மாதத்திற்குள் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 5 இலட்சத்துக்கும் அதிகமாகலாம் என்றும் சஞ்சய பெரேரா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஆகவே இத்தகையதொரு சூழ்நிலையை தடுப்பதற்கு நாட்டை முழுமையாக முடக்கி கொரோனா வைரஸ் தொற்றை கட்டுப்படுத்துவதற்கு உரிய செயல்பாட்டை முன்னெடுக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

# ரூ.18 இலட்சம் மதிப்புடைய கொலுசுகள் பறிமுதல்

சென்னை, மே. 12

தூத்துக்குடியில் இருந்து இலங்கைக்கு கடத்த முயன்ற 18 இலட்சம் ரூபா மதிப்புள்ள வெள்ளிக் கொலுசுகள் நேற்று செவ்வாய்க்கிழமை காலை பறிமுதல் செய்யப்பட்டன.

தூத்துக்குடியில் இருந்து இலங்கைக்கு சட்டவி ரோதமாக வெள்ளிக் கொலுசுகள் கடத்தப்பட இருப்பதாக கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் கியூ பிரிவு பொலிஸ் இன்ஸ்பெக்டர் விஜய அனிதா, சப் இன்ஸ்பெக்டர் ஜீவமணி தர்மராஜ் மற்றும் பொலிஸார் இனிகோ நகரைச் சேர்ந்த பட்டுராஜன் என்பவரிடம் விசாரணை நடத்தினர்.

அவர் அளித்த தகவலின் பேரில் தூத்துக்குடி திரேஸ்புரத்தைச் சேர்ந்த எம். அந்தோனி என்பவரது வீட்டில் சோதனையிட்டதில், 25 கிலோ எடையுள்ள வெள்ளிக் கொலுசுகள் பதுக்கி வைத்திருப்பது தெரியவந்தது.

இதன் மதிப்பு .18 இலட்சம் ரூபா எனக் கூறப்படுகிறது.

இதையடுத்து பொலிஸார் 25 கிலோ வெள்ளிக் கொலுசுகளை பறிமுதல் செய்தனர்.

மேலும், பட்டுராஜை கைது செய்தனர். தலைமறைவாக உள்ள அந்தோனி என்பவரை தேடி வருகின்றனர்.

# பொலிஸாரின் விடுமுறை இரத்து

கொழும்பு, மே. 12

நாட்டின் தற்போதைய நிலைமையை கருத்திற் கொண்டு, அனைத்து பொலிஸ் உத்தியோகத்தர்களுக்குமான விடுமுறைகள் இரத்து செய்யப்பட்டுள்ளன.

இதன்படி, எதிர்வரும் 30ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் அமுலாகும் வகையில் இவ்வாறு பொலிஸாருக்கான விடுமுறைகள் இரத்து செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஹெரோயினுடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், மே. 12

3 கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் ஒருவர் யாழ்.பொலிஸ் நிலைய போதைத்தடுப்புப் பிரிவினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபர் கோப்பாய் டச்சு வீதியை சேர்ந்த 32 வயதுடைய குடும்பஸ்தர் என பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர் யாழ்.நகரப்பகுதியில் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபடுவதாக பொலிஸாருக்கு தகவல் கிடைக்கப் பெற்றதையடுத்து அவரை தீவிரமாக கண்காணித்த பொலிஸார் நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் யாழ் நகரப் பகுதியில் வைத்து கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட நபரிடம் இருந்து 3 கிராம் 125 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டிருந்தது.

# துறைமுகநகர சட்டமூலம் தொடர்பான விவாதத்தை ஒத்திவைக்கவேண்டும்

## அரசிடம் எதிர்க்கட்சி கோரிக்கை

கொழும்பு, மே. 12

18 ஆம் திகதி நடைபெறவிருக்கும் கொழும்பு துறைமுக நகர சட்டமூலம் தொடர்பான நாடாளுமன்ற விவாதம் ஒத்திவைக்கப்பட வேண்டும் என எதிர்க்கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

நேற்று கண்டியில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல இந்த கோரிக்கையை விடுத்தார்.

மேலும் அனைத்து கட்சி தலைவர்கள் கூட்டத்திலும் இந்த கோரிக்கையை முன்வைக்கவுள்ளதாக அவர் கூறினார்.

இதேவேளை, கொரோனா தொற்று விகிதம் அதிகரித்துவரும் நிலையில் தடுப்பூசி திட்டம் குறித்து அரசாங்கம் அதிகளவில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் கிரியெல்ல கேட்டுக் கொண்டார்.

# யாழ்.போதனா வைத்தியசாலையில் நாளாந்தம் இரண்டு தடவைகள் பி.சி.ஆர். பரிசோதனைகள்

யாழ்ப்பாணம், மே 12

நாளாந்தம் அதிகரித்துவரும் கொரோனாப் பரவல்காரணமாக யாழ்.போதனா வைத்தியசாலையில் பி.சி.ஆர் பரிசோதனைகளை நாளாந்தம் இரண்டு தடவைகள் மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறித்த நடவடிக்கை நேற்று முன் தினம் முதல் நடைமுறைக்கு வந்துள்ளதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இதன் அடிப்படையில் நாளாந்தம் பகல் ஒரு சுற்றாகவும் இரவு மற்றொரு சுற்றாகவும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, வட்டுக்கோட்டை தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்தில் கொரோனா நோயாளர்களை பராமரிக்கும் செயற்பாடு இன்று முதல் முன்னெடுக்கப்படும் என்றும் மருத்துவர்கள் குழு அதனைப் பார்வையிட்டது என்றும் அவர் தெரிவித்தார்.

# டிஜிற்றல் தடுப்பூசி அட்டை அறிமுகம்

கொழும்பு, மே. 12

இலங்கையில் டிஜிற்றல் தடுப்பூசி அடையாள அட்டை எதிர்காலத்தில் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

இந்த அடையாள அட்டை தடுப்பூசி திட்டத்தை சீராக செயற்படுத்த உறுதி செய்யும் என்று விளையாட்டு மற்றும்இளைஞர் விவகாரத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்ப நிறுவனத்தின் உதவியுடன் டிஜிற்றல் அடையாள அட்டை உருவாக்கப்பட்டு வருகிறது எனவும் அவர் குறிப்பிட்டார்.

அடையாள அட்டையில் தடுப்பூசி பெற்ற நபரின் விவரங்கள், தடுப்பூசியின் வகை, பயன்படுத்தப்பட்ட தடுப்பூசியின் விபரங்கள், வழங்கப்பட்ட திகதி மற்றும் தடுப்பூசி செயன்முறை தொடர்பான ஏனைய தகவல்கள் இருக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

# அத்தியாவசிய விற்பனை நிலையம் தவிர்ந்தவை மட்டக்களப்பில் மாலை 6 மணியுடன் மூடப்படும்

மட்டக்களப்பு, மே. 12

மட்டக்களப்பு மாவட்டத்தில் அத்தியாவசிய விற்பனை நிலையங்கள் தவிர்ந்த ஏனைய வர்த்தக நிலையங்களை மாலை 6 மணியுடன் மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் மட்டக்களப்பு மாவட்டத்தில் 20 கொரோனா தொற்றாளர்கள் இனங் காணப்பட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித் தார்.

நேற்று மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கொரோனா செயலணி கூட்டத்தை தொடர்ந்து நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்துக்குள் வருப வர்களையும் இங்கிருந்து செல்பவர்கள் தொடர்பில் அத்தியாவசிய சேவை தவிர்ந்து ஏனையவர்களை அனுமதிப்பதில்லையே னவும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

# மாவட்டங்களுக்கு இடையேயும் பயணக் கட்டுப்பாடுகள் வரலாம்

## இராணுவத் தளபதி தெரிவிப்பு



கொழும்பு, மே. 12

**கோவிட்-19 நோய்த்தொற்றாளர்கள் பற்றிய அறிக்கைகளைக் கருத்தில் கொண்டு எதிர்காலத்தில் மாவட்டங்களுக்கு இடையே பயணக் கட்டுப்பாடுகளை விதிக்க வாய்ப்பு இருப்பதாக இராணுவத் தளபதி, ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.**

“மாகாணங்களுக்கு இடையேயான பயணக் கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்துவது இன்று(நேற்று) நள்ளிரவு முதல் தொடங்கும். இது 30 ஆம் திகதி வரை நடைமுறையில் இருக்கும்.

இருப்பினும், இந்த கட்டுப்பாடுகள் அத்தியாவசிய சேவைகளை தொடர்வதற்கு தடையாக இல்லை” என்றும் இராணுவ தளபதி குறிப்பிட்டார்.

# ஜனவரி முதல் இதுவரை 80,068 பேருக்கு தொற்று

கொழும்பு, மே. 12

2021 ஜனவரி முதல் மே 9 ஆம் திகதி காலைவரையில் நாட்டில் 80 ஆயிரத்து 68 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்றியுள்ளது என புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி ஜனவரி மாதம் 20 ஆயிரத்து 696 பேரும், பெப்ரவரி மாதம் 19 ஆயிரத்து 85 பேரும், மார்ச் மாதம் 9 ஆயிரத்து 463 பேரும், ஏப்ரல் மாதம் 15 ஆயிரத்து 440 பேரும் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளர்.

அத்துடன் இம்மாதத்தில் மே 1 முதல் 11 ஆம் திகதி காலை வரை 20 ஆயிரத்து 384 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்றியுள்ளது.

மேல் மாகாணத்திலேயே அதிகளவான தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

# மூடப்பட்டது கொத்மலை ஆடைத்தொழிற்சாலை!

## 69 ஊழியர்களுக்கு கொரோனா

கொழும்பு, மே. 12

69 ஊழியர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதியானதையடுத்து கொத்மலை பகுதியிலுள்ள தனியார் ஆடைத்தொழிற்சாலையொன்று தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

கொறொனா வைரஸ் பரவலைக்கட்டுப்படுத்துவதற்காகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்படி ஆடைத்தொழிற்சாலையில் பணிபுரியும் 799 ஊழியர்களுக்கு மத்தியில் நடத்தப்பட்ட அன்ரிஜென் பரிசோதனையில் 69 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து சுகாதார வைத்திய அதிகாரிகள் மற்றும் சுகாதார பரிசோதகர்கள் வழங்கிய ஆலோசனையின் பிரகாரமே தொழிற்சாலை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

இத்தொழிற்சாலையில் நுவரெலியா, கொத்மலை, புஸல்லாவை, ராவணாகொட மற்றும் நாவலப்பிட்டிய பகுதிகளில் உள்ளவர்கள் தொழில்புரிகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# அத்தியாவசிய சேவைகளுக்கு எந்த அசௌகரியமும் ஏற்படாது

## உதய கம்மன்பில கூறுகிறார்



கொழும்பு, மே. 12

அத்தியாவசிய சேவைகளுக்கு எந்த அசௌகரியமும் ஏற்படாத வகையில் போக்குவரத்து கட்டுப்பாடுகள் அமுல்படுத்தப்படும் என அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அத்தியாவசிய சேவைகள், ஏற்றுமதி சார்ந்த தொழில்கள், வேளாண்மை மற்றும் மீன்வளத் தொழில் ஆகியவை பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தாலும் செயற்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

முழு நாட்டுக்கும் ஒரே நேரத்தில் கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்குப் பதிலாக, கொரோனா தொற்று எண்ணிக்கையை கருத்திற்கொண்டு கட்டுப்பாடுகள் மற்றும் அத்தியாவசிய சேவை தொடர்பாக அதிகாரிகள் கவனம் செலுத்தவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

பயணக் கட்டுப்பாடுகள் குறித்த முடிவு அமைச்சரவையால் எடுக்கப்பட்டது என்றும் கொரோனா தடுப்புக்கான ஜனாதிபதி செயலணியால் அல்ல என்றும் அமைச்சர் உதய கம்மன்பில கூறினார்.

# பொதி சேவைகள் இடைநிறுத்தம்

கொழும்பு, மே 12

ரயில்கள் ஊடாக முன்னெடுக்கப்படும் பொதி சேவைகள் மீள் அறிவித்தல் வரை இடைநிறுத்தப்படுவதாக ரயில் திணைக்களம் அறிவித்துள்ளது.

கோவிட் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்து தடை விதிக்கப்பட்டுள்ளதன் காரணமாக இந்த தீர்மானத்தை மேற்கொண்டுள்ளதாக ரயில் திணைக்களத்தின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

# மாலைதீவு முன்னாள் ஜனாதிபதியின் நலம் விசாரித்தார் பிரதமர் மஹிந்த

கொழும்பு, மே. 12

மாலைதீவிலுள்ள வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் முன்னாள் ஜனாதிபதி மொஹமட் நஷீட்டின்உடல்நலம்குறித்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தொலைபேசி ஊடாக கேட்டறிந்தார்.

குண்டுத் தாக்குதலுக்கு இலக்கான மாலைதீவு முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய பாராளுமன்ற சபாநாயகருமான மொஹமட் நஷீட் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றார்.

53 வயதான அவர் அந்நாட்டு தலைநகர் பகுதியில் தமது காரில் பயணிக்கவிருந்த நிலையில், கடந்த 6ஆம் திகதி இந்த குண்டு வெடிப்பு சம்பவம் இடம்பெற்றிருந்தது.

இந்தநிலையில் மாலைதீவிலுள்ள வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் முன்னாள் ஜனாதிபதி மொஹமட் நஷீட்டின் உடல் நலம் குறித்து நேற்று பிரதமர் மஹிந்த தொலைபேசி ஊடாக கேட்டறிந்துள்ளார்.

மேலும், அவர்விரைவில்பூரண குணமடைய வேண்டுமென பிரார்த்திப்பதாகவும் குறித்த தொலைபேசி அழைப்பில் நஷீட்டின் தந்தையிடம் தெரிவித்ததாக பிரதமர் ஊடகப்பிரிவு குறிப்பிட்டுள்ளது.

# வெளி மாகாணத்தவர்களுக்கு தங்குமிடம் வழங்குவோர்கள் மீது சட்டநடவடிக்கை



கொழும்பு, மே. 12

மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ள நிலையில் இன்று நள்ளிரவு முதல் எதிர்வரும் 31ஆம் திகதி வரை யான காலப்பகுதியில் வெளி மாகாணங்களில் இருந்து வரும் நபர்களுக்கு தங்குமிட வசதிகளை ஏற்படுத்தி கொடுப்போருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

பொலிஸ் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு பேசும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

மேலும் வெளிமாகாணங்களில் இருந்து வந்து விடுதிகளில் தங்கியிருப்பதை முற்றாக தவிர்த்துக்கொள்ளுமாறு பொலிஸார் பொது மக்களிடம் கோரியுள்ளனர்.

# ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியில் நடைபெறும் ஐறோட் திட்டம் தொடர்பில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மே. 12

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுடன் மேற்கொள்ளப்படும் ஐறோட் திட்டம் தொடர்பிலான கலந்துரையாடல் நேற்று முற்பகல் 10 மணியளவில் ஆளுநர் திருமதி பீ.எஸ்.எம் சார்ள்ஸ் தலைமையில் ஆளுநர் செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பிரதமசெயலாளர் , ஆளுநரின்செயலாளர், உள்ளூராட்சி அணையாளர் , மாநகரசபை ஆணையாளர் , வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகள் , திணைக்கள அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

வடமாகாணத்தில் இடம்பெறும் 17 ஒப்பந்த திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடிய ஆளுநர், வீதி அமைப்பதற்கான திட்டங்களினை வகுக்கும் போது கழிவு நீர் வடிகாலமைப்பு , மின்சாரம் , நீர் வடிகாலமைப்பு என்பவற்றினை கவனத்தில் கொள்ளவேண்டும் என தெரிவித்தார்.

மேலும். எதிர்காலத்தில் இவ்வாறான பிரச்னைகளை தவிர்க்கும் முகமாக நகர சபை , மாநகரசபை மற்றும் பிரதேச சபை ஆகியனவீதி நிர்மாணப்பணிகளை தொடங்குவதற்கு முன்னர் குறித்த பகுதிகளில் வசிக்கும் மக்களுடன் கலந்துரையாடி தேவையான இட வசதியினை பெற்றுக்கொள்ள வேண்டும் என தெரிவித்ததோடு மாநகர சபைகள் கட்டடங்களுக்கான அனுமதியை வழங்கும்போது எதிர்கால அபிவிருத்தி தொடர்பிலும் கவனம் செலுத்தவேண்டும் எனத் தெரிவித்தார்.

அதனைதயடுத்து , யாழ் மாவட்டத்தின் ஐறோட் திட்டத்தின் நிலைப்பாடு தொடர்பில் கேட்டறிந்த ஆளுநர், கிரவல் மற்றும் மணலை சட்டபூர்வமான முறையில் பெற்றுக்கொள்வதற்கு, மணலின் அளவு தொடர்பான தகவலையும் அதற்குரிய அனுமதியினையும் மாவட்ட அரசாங்க அதிபர்களின் ஊடாக பெற்றுக் கொள்ளுமாறு தெரிவித்தார்.

மேலும், கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெறும் ஐறோட் திட்டம் தொடர்பில் கலந்துரையாடுகையில்- கிராமப்புற வீதிகளில் கனரக வாகனங்கள் பயணிப்பதினை தவிர்க்கும் முகமாக வர்த்தமானியில் பிரசூரம் செய்வதுடன் குறித்த வீதிகளில் பதாதைகளினை காட்சிப்படுத்துவதுடன் பொலிஸாருக்கும் அறியப்படுத்துமாறு கேட்டுக்கொண்டார்.

வடமாகாணத்தின் சனத்தொகையை கருத்தில்கொண்டே அனைத்து அபிவிருத்தி திட்டங்களையும் தயார்செய்ய வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

# மரண அறிவித்தல்கள்

மலர்வு 19 - 08 - 1933



உதிர்வு 04 - 05 - 2021

## சுப்பிரமணியம் செல்லம்மா

யாழ். புங்குடுதீவு வல்லன் 10ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ் La Courneuve வை வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் செல்லம்மா கடந்த (04.05.2021) செவ்வாய்க் கிழமை அன்று பிரானஸில் காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான கந்தையா - கண்மணி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான மருதப்பு - சீதேவிப்பிள்ளை தம்பதிகளின் பாசமிகு மருமகளும், காலஞ் சென்ற சுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும், தர்ம ராஜா (ஜேர்மனி), யோகேஸ்வரி (கலா- பிரான்ஸ்), செல்வரெத் தினம் (செல்வா- பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், லிங்கேஸ்வரி (ஜேர்மனி), கஜேந்திரநாதன் (ராசன்- பிரான்ஸ்), தயாநந்தி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், சபேசன், சர்மிளா, ருபேசன், நிரோசன், பிரமிளா(ஜேர்மனி), கீர்த்தனா, கீர்த்தீபன், கார்த்தீபன், கீர்த்தனன், கிருஷாந், லக்சிகா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான பாக்கியம், பொன்னம்மா, கனகரெத்தினம், கமலாம்பிகை, செல் லத்துரை, நாகராசா மற்றும் இராமச்சந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் எதிர்வரும் (17.05.2021) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணி தொடக்கம் 12.55 வரை Funérarium 95 Rue Marcel Sembat, 93430 Villetaneuse, France பார்வைக்கு வைக்கப்பட்டு இறுதிக் கிரியைகள் அன்று பிற்பகல் 1.25 மணியளவில் அதே இடத்திலேயே இடம்பெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்

தொடர்புகளுக்கு
கலா - மகள் +33766126143

மலர்வு 31 - 03 - 1959



உதிர்வு 09 - 05 - 2021

## திருமேனி சிறிகந்தராசா

யாழ். அச்சுவேலி வளலாயைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனி Duisburg ஐ வசிப்பிடமாகவும் கொண்ட திருமேனி சிறிகந்தராசா கடந்த (09-05-2021) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார், திருமேனி - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், ஜெவதனாவின் அன்புக் கணவரும், சோபிதன், நிதுர்சன் ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்வரத்தினம், வரலட்சுமி, அன்பழகேந்திரன், வசந்தி, வசந்தகுமார், வசந்தசீலி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (12.05.2021) புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு Forest Cemetery Duisburg Düsseldorfer Str. 601, 47055 Duisburg, Germany யில் இறுதிக் கிரியைகள் இடம்பெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்

தொடர்புகளுக்கு
குடும்பத்தினர் +61469945596

# கிராம சேவகர் பிரிவுகளை முடக்குவதால் 'கொரோனா' பரவலை தடுக்க முடியாது!

### ஜனாதிபதிக்கு மருத்துவ நிபுணர்கள் சங்கம் கடிதம்



கொழும்பு, மே12

**இலங்கையில் கிராம சேவகர் பிரிவுகளை முடக்குவதால் கொரோனா வைரஸ் பரவலைத் தடுக்கவோ, பொருளாதார நடவடிக்கைகளைப் பாதுகாக்கவோ முடியாது என்று மருத்துவ நிபுணர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.**

மருத்துவ நிபுணர்கள் சங்கம், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளது.

மாகாணங்களுக்கு இடையில் மட்டுமல்ல உடனடியாக மாவட்டங்களுக்கு இடையிலான பயணக் கட்டுப்பாடுகளையும் விதிப்பதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் குறித்த சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது.

இலங்கையின் கொரோனாத் தடுப்பு மூலோபாயங்களை அரசு மீள்பரிசீலனை செய்ய வேண்டிய கட்டத்தை அடைந்துள்ளது எனவும் மருத்துவ நிபுணர்கள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

தேவையான முன்னேற்பாடுகளை எடுக்கத் தவறும் போது, நாட்டில் கொரோனா பரவலைக் கட்டுப்படுத்த முடியாமல் போகலாம் என்றும், எதிர்வரும் வாரங்களில் ஒரே நாளில் 10 ஆயிரம் நோயாளர்கள் பதிவாகக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது எனவும் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மருத்துவ நிபுணர்கள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. (இ)

# தொற்றால் மட்டக்களப்பில் இறப்பு வீதம் அதிகரிப்பு!

### மாநகர முதல்வர் சரவணபவன்

மட்டக்களப்பு, மே 12

மட்டக்களப்பு மாவட்டத்தில் கோவிட் மூன்றாம் அலையால் இறப்பு வீதம் அதிகரித்துள்ளமையால் பொதுமக்களை அவதானமாக செயல்படுமாறு மட்டக்களப்பு மாநகர சபையின் முதல்வர் தி.சரவணபவன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மட்டக்களப்பு மாநகரசபையில் நேற்று மாலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

மட்டக்களப்பு மாநகரசபைக்கு உட்பட்ட பகுதிகளில் நேற்று மாலை தொடக்கம் மருந்து விற்பனை நிலையங்கள் தவிர்ந்த ஏனைய வியாபார நடவடிக்கைகள் அனைத்தும் நிறுத்தப்படவேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாநகரத்திற்குள் மக்கள் தேவையற்ற வகையில் வெளியில் செல்வதை தவிர்த்துக் கொள்ளுமாறும் மாநகர முதல்வர் மக்களிடம் வேண்டுகோள் விடுத்தார். (ஐ)


# 1030 பேர் நேற்று குணமடைந்தனர்

கொழும்பு, மே 12

இலங்கையில் கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்களில் மேலும் 1,030 பேர்நேற்று செவ்வாய்கிழமை பூரணமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

இதற்கமைய நாட்டில் இதுவரை கொரோனா தொற்றிலிருந்து பூரணமாக குணமடைந்தவர்களில் எண்ணிக்கை 106,641 ஆக அதிகரித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மதுபானசாலைகள் மாலையுடன் பூட்டு!



கொழும்பு, மே 12

தீவிரம் பெற்றுவரும் கொரோனா பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் நாட்டிலுள்ள அனைத்து மதுபான சாலைகளையும் மாலை 6 மணியுடன் மூட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இந்த நடைமுறை நேற்றுமுதல் அமுலுக்கு வந்தது என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

# ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபட விரும்புவோருக்கு வாய்ப்பு!

யாழ்ப்பாணம், மே 12

பலநாள் கலன்கள் மூலம் ஆழ்கடல் தொழிலில் ஈடுபட விரும்புவோருக்கு வங்கிக் கடன்களும் பயிற்சிகளும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்த கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஆர்வமுள்ளவர்கள் கடற்றொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர்களிடம் பெயர்களை பதிவு செய்யுமாறு கூறியுள்ளார்.



யாழ். கடல் நீரேரி பிரதேசத்தில் அண்மித்த கடல் பிரதேசத்தில் இறால் மற்றும் கடலட்டை பண்ணை அமைத்தல் மற்றும் கொடுவாய் போன்ற மீன்களை வளர்த்தல் தொடர்பாக நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், யாழ் கடல் நீரேரி, தீவக பிரதேசத்தை அண்டிய கடல் பிரதேசத்தில் காணப்படும் வளமான சூழலை சரியாக பிரதேச மக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் சொன்னார்.

கடற்றொழில் அமைச்சரின் யாழ். அலுவலகத்தில் இடம் பெற்ற கலந்துரையாடலில் பிரதேச கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள், சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-3)

# மாகாண சபைகளுக்கான தேர்தலும் தமிழ்க் கட்சிகளின் எதிர்பார்ப்பும்...




> மாகாண சபை முறைமை உருவான தொன்றும் எளிய விசயமல்ல. பல ஆயிரக்கணக்கான போராளிகளின் அளப்பரிய தியாகத்தினால் உருவான ஒன்று. காலத்தைச் சரியாகக் கணித்துக் கொண்ட சாதுரியத்தினால் பெற்றவெற்றி. அன்றைய அரசியல் சூழலில் அது ஒரு பெரிய அரசியல் வெற்றி.

கருணாகரன்

மறுபடியும் மாகாண சபைகளுக்கான தேர்தலைப் பற்றிப் பேசப்படுகிறது. தேர்தல்களையும் அதன் வழியாக அதிகாரத்தையும் குறிவைத்திருப்போருக்கு எப்போதும் இந்தச் சிந்தனையே இருக்கும். இதனால்தான் இவர்கள் முதலமைச்சர் வேட்பாளர்களைப் பற்றியும் சேர்த்துச் சிந்திக்கிறார்கள். யாரை முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்தலாம் என. சனங்களுக்கும் இது ஒரு கொஞ்ச நாட்களுக்குப் பொழுதுபோகும் நல்லதொரு வேடிக்கை. ஊடகங்கள் மற்றும் அதையொட்டிய அரசியல் ஆருடர்களுக்கும் இது நல்ல சரக்கு. சில வாரங்களுக்கு வியாபாரமாக்கலாம்.

மற்றும்படி மக்களுக்கான விசயமாக இதை இவர்கள் பார்க்கவில்லை. அப்படிப் பார்க்கின்ற பக்குவமும் இவர்களிடமில்லை. அரசுக்கு எதிர்ப்பையும் அதிருப்தியையும் காட்டுவதற்கே மக்கள் விரும்பு கிறார்கள். மக்களின் இந்த அரச வெறுப்புணர்வை தமிழ் அரசியற் கட்சிகளும் அரசியல்வாதிகளும் ஊடகங்களும் ஊடகவியலாளர்களும் அரசியற் சோதிடர்களும் நல்லமாதிரிப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். வழமையாக இதுதான் நடக்கிறது. இப்போதும் இதுதான் நடக்கிறது. இனியும் இதுதான் நடக்கும்.

இந்த இடத்தில் நீங்கள் சில கேள்விகளை எழுப்புவீர்கள் - “அரசின் மீது தமிழ் மக்களுக்கு ஏன் வெறுப்பு? ஏன் அவர்கள் அரசின் மீது தங்கள் அதிருப்தியை வெளிக்காட்ட விரும்புகிறார்கள்? அரசு அப் படி தமிழ்மக்களின் மீது வெறுப்பாகவும் பாரபட்ச மாகவும் நடப்பதால்தானே!” என.

இது உண்மையே. இதே வேளை இதனால்தான் இதை வைத்து மேற்படி தரப்புகள் பிழைக்கின்றன என்பதும் மறுக்க முடியாத உண்மை.

அரசு பாரபட்சமாக நடத்துகிறது, ஒடுக்குகிறது என்றால் அதை எப்படி முறியடிப்பது என்றே இவை சிந்திக்க வேண்டும். அதற்கான பொறிமுறைகளை உரு வாக்க வேண்டும். அவற்றைச் செயற்படுத்த வேண்டும். அதில் ஏற்படும் இடர்ப்பாடுகளைக் கடந்து - அதை எதிர்கொண்டு பயணிக்க வேண்டும். அல்லது அரசினாலும் அரசுக்கு ஆதரவான தரப்புகளாலும் ஏற்படுத்தப்படுகின்ற நெருக்கடிகளை எதிர்கொண்டு முறியடிக்க வேண்டும். இதற்கு மக்களுடனான அரசியல் உறவு அவசியம். அதி ருந்தால் அது மக்கள் போராட்டமாக மாறும். இந்த மாதி ரித் தேர்தல் விளையாட்டுகளோடு மட்டும் இது நிற்காது.

தேர்தலில் அதிகமாக ஒன்றும் கஸ்ரப்பட வேண்டியதில்லை. ஒன்றிரண்டு மாதங்கள் மட்டும் வேலை செய்தால் போதும். வெற்றிக்கனியைப் பறித்து விடலாம். இதிலும் பாதி வேலையை அரசாங்கம் செய்து கொடுத்துவிடும் - தன்னுடைய இனவிரோத நடவடிக் கையினால். தேர்தல் காலத்தில் இதை அது இன்னும் அதிகமாகவும் நுட்பமாகவும் செய்யும். ஏனென்றால் அதற்கும் இனவாத அலையும் தமிழ்த் தரப்பின் எதிர்ப்பும் எழுச்சியும் வேணும். அப்போதுதான் சிங்கள மக்களின் வாக்குகளை அதிகமாகக் கவரலாம்.

இந்த மாதிரி இணைந்த பொறிமுறையில் (உனக்கு நான் - எனக்கு நீ என்ற விதமாக) தேர்தல் என்பது இனிப்பான ஒன்றே. அதனால்தான் தேர்தலைக் குறித்து இவர்களுக்கு கரிசனை அதிகம். அதில் வரும்படிகளும் வாய்ப்புகளும் அதிகம். இதனால் அது ஒரு தொழில் துறையாக மற்றும்படி அது மக்களுக் கானதொரு நல்வாய்ப்பு. மக்கள திகாரத்துக்கான ஏற்பாடு. ஜனநாயக உரிமையை மக்கள் தொடர்ந்தும் தக்க வைத்துக்கொள்வதற்கான அடிப் படை என்ற நோக்கில் - உயர்ந்த எண்ணத்தினால் அல்ல.

ஆகவே மாகாண சபைகளுக்கான தேர்தல் என்பது மக்களுக்கான தேவை, மக்கள் நலன் என்பதற்காக இல்லாமல் இந்தத் தரப்புகளின் தேவைகளுக்கானது என்பது தெளிவு. இதை மேலும் உறுதிப்படுத்த வேண்டுமானால், மாகாண சபைகளுக்கான தேர்தலைப் பற்றி - அது மக்களுடைய ஜனநாயக உரிமை என்ற நோக்கில் இதை இவர்கள் நோக்கினால், அதனுடைய அதிகாரத்தைப் பற்றியும் ஒழுங்கைப் பற்றியும் அக்கறைப்படுவர். முக்கியமாக 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதை, அதற்கான பொறிமுறையை, அரசியல் அழுத்தத்தை, அதற்கான இராஜதந்திரத்தைப் பற்றிச் சிந்தித்திருப்பர். இப்பொழுதுகூட அதற்கான முயற்சிகளில் ஈடுபடுவர். ஆனால் அப்படி எதுவும் நடக்கவில்லை. வெறுமனே அரசாங்கத்தைக் கண்டிப் பது, திட்டித்தீர்ப்பது என்ற அளவில்தான் இவர்களு டைய நடவடிக்கைகள் உள்ளன. ஒழுங்கைப் பொறுத் தும் இதுதான் நிலமை.

மாகாண சபை நிர்வாகம் வடக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கைகளில் இருந்தபோது அதனுடைய ஆட்சித் திறனும் ஒழுங்கும் சீர் கெட் டிருந்தது. முதலமைச்சர் மீதான நம்பிக்கை இல்லாத் தீர்மானம், அவர் மீதான எதிர்ப்பு, அமைச்சர்களின் ஊழல் குற்றச்சாட்டு, அமைச்சர்கள் பதவி நீக்கம், மாகாண நிர்வாகத்தின் வினைத்திறனின்மை, புத்தாக்கம் குறித்த அக்கறையின்மை என ஏராளம் சீரழிவுகள் அந்த நாட்களில் நீண்டிருந்தன. இதற்காக முதலமைச்சராக இருந்த விக்னேஸ்வரனும் வெட்கப்படவில்லை. அவரை ஆதரித்தோரும் வெட்கமடையவில்லை.

கூட்டமைப்பும் அதனுடைய ஆட்களும் அக்கால ஆட்சியில்பொறுப்பு வகித்தவர்களும் கூடக் கூச்ச மடையவில்லை. அப்படி வராது. காரணம், இவர்கள் ஒருபோதும் மக்களுக்குப் பொறுப்புச் சொல்லும் பக்குவத்தோடும் பொறுப்புணர்வோடும் நடந்து கொண்டவர்களில்லையே! அப்படியானோருக்கே குற்றவுணர்ச்சியும் பொறுப்புச் சொல்லும் பக்குவமும் வரும். அரசியல் வாணிபர்களிடம் அதை எதிர்பார்க்க முடியாது. என்பதால்தான் மாகாண சபைத் தேர்தல் என்றவுடன் மறுபடியும் வாலை நிமிர்த்திக் கொண்டு முன்நிற்கிறார்கள். ருசி இவர்களை லேசில் விட்டு விடாதல்லவா!

வடக்கு மாகாணசபை விக்னேஸ்வரனின் தலைமை யில் இயங்கியபோது மேற்கொள்ளப்பட்ட மறக்க முடியாத - சிறந்த வேலைத்திட்டம் எதையாவது யாரா வது இன்று சொல்லக் கூடியதாக உள்ளதா? அல்லது அப்போது எட்டப்பட்ட - உருவாக்கப்பட்ட அரசியல் அடைவுகள், பெறுபேறுகள் போன்ற வற்றைச் சொல்ல முடியுமா? குறிப்பாக 38,000 அரச உத்தியோகத்தர்களைக் கொண்ட வடக்கு மாகா ணசபைக் கட்டமைப்பை ஒழுங்காக நிர்வகிக்க முடியா மல் அதைச் சீரழிவுக்குட்படுத்தியதே மாகாணசபைக் காலத்தில் நடந்தது.

பதிலாக ஊழலும் சீரழிவுமாகவே அன்றைய நிர்வா கம் இருந்தது. இதனால் அப்பொழுது தினமும் ஏராளம் முறைப்பாடுகளும் ஏராளம் கோரிக்கைகளும் மக்களா லும் உத்தியோகத்தர்களாலும் ஆளுநரிடம் முன்வைக்கப் பட்டன. அதாவது மக்கள் தாம் தெரிவு செய்த பிரதிநிதி களிடத்திலும் அந்தப் பிரதிநிதித்துவ சபையிலும் நம்பிக்கை இழந்து மத்திய அரசின் பிரதிநிதியான ஆளுநரிடம் நம்பிக்கை வைக்க வேண்டிய நிலை உருவானது.

இப்படித்தான் கிழக்கு மாகாணசபையிலும் தமிழ்த் தரப் பும் முஸ்லிம் தரப்பும் ஏராளம் தவறுகளை இழைத்தன.

இது மக்களின் நம்பிக்கையையும் மாகாணசபையின் அதிகாரத்தையும் மத்தியின் கைகளில் ஒப்படைப்ப தற்குச் சமம். அப்படி மத்தியின் கைகளில் அதிகாரத்தை ஒப்படைப்பதாயின் பிறகெதற்கு மாகாணசபையும் தேர்தலும்? இதனையும் ஒரு வாய்ப்பாகக் கொண்டே இப்பொழுது கோத்தபாய அரசு மாகாண சபை முறையை ஒழிப்பதைப் பற்றி யோசிக்கிறது. அல்லது மாகாணசபை முறையையும் 13 யும் ஒழிக்க முயற்சிக்கும் சிங்கள ஆதிக்கவாதி களுக்கு நாமும் அனு சரணை வழங்கி விடு கிறோம்.

மாகாணசபை முறைமை உருவான தொன்றும் எளிய விசயமல்ல. பல ஆயிரக் கணக்கான போராளிகளின் அளப்பரிய தியாகத்தினால் உருவான ஒன்று. காலத்தைச் சரியாகக் கணித்துக் கொண்ட சாதுரியத்தி னால் பெற்றவெற்றி. அன்றைய அரசியற் சூழலில் அது ஒரு பெரிய அரசியல் வெற்றி. ஒரு பெரிய அரசியல் அறுவடை. ஆனாலும் அதையும் விட அதிகமாக அன்று பெரியதொரு அரசியல் தீர்வை தமிழர்களும் எதிர்பார்த்தனர். புலிகளும் எதிர்பார்த்தனர்.

கிடைத்த மாகாண சபை முறையை பலப்படுத்து வதே பெரிய சவாலாக இருந்தது. இன்றும் இது ஒரு பெரிய சவாலே. அப்படியிருக்கும்போது மிக மிக பொறுப்பாகவும் சாதுரியமாகவும் இந்தக் காரியத்தைச் செய்ய வேண்டும். செய்திருக்க வேண்டும். ஆனால் நடந்தது என்ன? நடந்து கொண்டிருப்பது என்ன?

மாகாண சபையை - 13 ஐ இப்போது வரை சிங்கள அதிகாரத் தரப்பினர் விரும்பவேயில்லை. இந்தியா கூட வடக்குக் கிழக்குக்கு என தனியாக மாகாணசபை முறையை உருவாக்கவில்லை. அது சாத்தியமும் இல்லை. அதனால்தான் இலங்கையின் ஒன்பது மாகாணங்களுக்கும் அதிகாரம் என மாகாணசபை முறைமை உருவாக்கப்பட்டது. இப்போதும் அனைத்து மாகாணங்களுக்குமான ஏற்பாடுகள் என்று ஒன்றோ பலவோ உருவாக்கப்பட்டால்தான் உண்டு. இல்லை என்றால் எதுவுமே இல்லை.

இப்படிப் பலதுண்டு. இதையெல்லாம் புரிந்து கொள்ளாமல் தேர்தலைப் பற்றிச் சிந்திப்பதென்பது மக்கள் விரோதமானது. மகா முட்டாள்தனமானது. இவை இரண்டிலிருந்தும் மீள்வதே தமிழர்களுடைய முதல் வேலையாக இருக்க வேண்டும். **- அரங்கம்**

# கொரோனா வைரஸ் பாதித்தால் ஒட்சிசன் அளவு ஏன் குறைகிறது?



கொரோனாவின் முதல் அலையில் சொல்லப்பட்ட நோய் அறிகுறிகளான சளி, இருமல், காய்ச்சல் ஆகியவை சாதாரண ஃப்ளூ காய்ச்சலுக்கும் பொருந்தக் கூடியதே. இது சீரியசான நிலையில் நிமோனியா, மூச்சுத்திணறல் ஏற்படுகிறது.

அதன் பிறகு இப்போது கொரோனா நுரையீரலில் நேரடியாக நுழைந்து விடுவதும், காய்ச்சல், சளி போன்ற அறிகுறிகள் இல்லாமலேயே கொரோனா பாதிப்பு ஏற்படுகிறது. அதனால்தான் ஆர்.டி.-பி.சி.ஆர். டெஸ்ட் சோதனை சில சந்தர்ப்பங்களில் கொரோனா இருப்பது தெரியாமல் நெகெட்டிவ் என்று வருகிறது, ஆனால் சி.டி.ஸ்கேனில் கோவிட் நிமோனியா பலருக்கு உறுதியாகியுள்ளது.

மேலும் நுரையீரல் அல்லாமல் இரைப்பை - குடல் பாதையையும் இந்தப் புதிய கொரோனா திரிபு பாதிப்பதாக மருத்துவர்கள் எச்சரிக்கின்றனர், இதனால்தான் பசியின்மை, உணவைப் பார்த்தாலே குமட்டல், வயிற்றுப் போக்கு, கொஞ்சம் சீரியஸான கேஸ்களில் இரத்தத்தை முறித்து வயிற்றுப்போக்காகப் போகும் நிலை ஆகியவையும் கண்டறியப்பட்டுள்ளது.

அதனால்தன் புதிய நோய் அறிகுறிகளில் வயிற்றுப் போக்கு, குமட்டல், பசியின்மை சேர்க்கப்பட்டுள்ளது. மேலும் சிறு சிறு இரத்தக்குழாய்களில் இரத்தக் கட்டு ஏற்படுவதும் உருவாகியுள்ளது. இப்போது இந்தியாவில் இரண்டாம் அலையின் பிரதான நோய் அறிகுறி என்னவெனில் ஒட்சிசன் அளவு குறைவது, மூச்சுத்திணறல் ஆகியவையாகும். இது ஏன் என்று மருத்துவ ஆய்வாளர்களை திகைப்படைய வைத்துள்ளது.

இரத்தத்தில் ஒட்சிசன் அளவு குறைவது Hypoxia என்று அழைக்கப்படுகிறது. ஒட்சிசன் அளவு குறைந்தாலும் நோயாளிகள் மிகவும் இயல்பாகவே இருப்பார்கள். அதனால்தான் இதற்கு Happy Hypoxia என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

**இரத்தத்தில் ஒட்சிசன் அளவு குறையக் காரணமென்ன?**

ஆரோக்கியமான நபர்களில் இரத்தத் தில் ஒட்சிசன் அளவு 95% என்பது இயல்பா னது. ஆனால் கோவிட்-19 நோயாளிக ளுக்கு 40% வரை குறைந்து பெரிய நெருக்கடிகளை ஏற்படுத்தி வருகிறது. ஒட்சிசன் அளவு குறைந்தால் அது கிட்னி, மூளை, இருதயம் போன்ற முக்கிய உறுப்புகள் பாதிப்படைவதற்கான எச்சரிக்கையாகும்.

நுரையீரலில் உள்ள சிறிய இரத்தக்குழாய்களின் சிக்கல் நிறைந்த ஒரு வலைப்பின்னலில் பரவலான இரத்தக்கட்டு ஏற்படுவதே கொரோனா பாதித்தால் இரத்தத்தில் ஒட்சிசன் அளவு குறைவதற்கான பிரதான காரணம் என்று பெரும்பாலான ஆராய்ச்சி முடிவுகள் கூறுகின்றன.

இதற்கு அடியில் உள்ள காரணம் என்னவெனில், நம் உடலில் இருக்கும் அழற்சி எதிர்வினைதான் (inflammatory reaction). இந்த நிலை ஏற்பட SARS-CoV-2 நோய்த்தொற்றும் இதற்கு அடுத்த கட்டமான கொரோனா வைரஸ் பாதிப்பும்தான். இது செல்களின் புரோட்டீன் எதிர்வினைகளைத் தூண்டி விட இரத்தக் கட்டுகள் பரவலாக ஏற்படுகின்றன. இந்த இரத்தக்கட்டுகளினால் நுரையீரலில் உள்ள திசுக்களுக்கு போதிய ஒட்சிசன் கிடைக்காமல் போய் விடுகிறது.

பல்ஸ் ஒக்சிமீற்றர் என்ற சிறு உபகரணம் உடலில் உள்ள ஒட்சிசன் அளவைக் காட்டு கிறது. விரலில் இந்த மீட்டரைச் சொருகிப்பார்த்தால்ஒட்சிசன் அள வையும் இருதயத் துடிப்பு அளவையும் காட்டி விடும்.



## மருத்துவ ஆய்வுகள் கூறுவது என்ன?

**கொரோனா அறிகுறிகள் இல்லாதவர்கள் அல்லது மிதமான அறிகுறிகள் உள்ளவர்களுக்கு ஒட்சிசன் அளவு குறைவதைக் கண்டுப்பிடிப்பது எப்படி?**

மிதமான கொரோனா அறிகுறிகளான இருமல், தொண்டைக் கட்டு, காய்ச்சல், தலைவலி ஆகியவை உள்ளன. ஆனால், மூச்சுத்திணறல் இல்லை என்றாலும் இரத்தத்தில் ஒட்சிசன் அளவை தொடர்ந்து கண்காணிக்க வேண்டும். உதடுகளின் நிறம் இயற்கையான நிறத்திலிருந்து நீல நிறமாக மாறும் என்றும் உடல் சருமத்தின் நிறமும் இளம் சிவப்பு அல்லது சிவப்பு கலந்த ஊதா நிறமாக மாறும் வாய்ப்புள்ளதாகவும் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். அடிக்கடி வியர்த்துக் கொட்டுவதும் ஒட்சிசன் அளவு குறைந்ததற்கான அறிகுறி என்று கூறப்படுகிறது. இவற்றையெல்லாம் கடைப் பிடித்து ஒட்சிசன் அளவை அதிகரிக்க மருத்துவர்கள் கூறும் நடைமுறைகளைக் கடைப்பிடித்தால் கோவிட்-19 ஆபத்திலிருந்து மீண்டு விடலாம்.

## வியட்நாம் நச்சுக் குண்டு வீச்சு:

# அமெரிக்க யுத்தம் குறித்த வழக்கு பிரான்ஸ் நீதி மன்றம் நிராகரிப்பு



பாரிஸிலிருந்து **குமாரதாஸன்**

வியட்நாம் போரின் போது அமெரிக் காவுக்கு இரசாயனப் பொருள்களை விநியோகித்த நிறுவனங்களுக்கு எதிராகத் தொடரப்பட்ட ஒரு வழக்கை பிரான்ஸின் நீதிமன்றம் ஒன்று நிராகரித்திருக்கிறது.

'அமெரிக்காவின் யுத்தகாலச் செயற்பாடுகளுடன் தொடர்புபட்ட ஒரு வழக்கை விசாரிப்பதற்கு நியாயாதிக்கம் கிடை யாது' என்று நீதிமன்றம் அதன் தீர்ப்பில் தெரிவித்திருக்கிறது.

பிரான்ஸில் வசிக்கின்ற வியட்நாமியப் பத்திரிகையாளரான 79 வயது ட்ரான் தோ என்கா(Tran To Nga) என்ற பெண்ணே நீண்ட காலச் சட்டப் போராட்டங்களுக்கு பிறகு இந்த வழக்கை பிரான்ஸின் நீதி மன்றம் ஒன்றில் தாக்கல் செய்திருந்தார்.

அழிவுகளுக்குப் பொறுப்புக் கூறல், நஷ்டஈடு வழங்குதல் ஆகியவற்றை முன்வைத்துக் கம்பனிகளுக்கு எதிராகத் தொடரப்பட்ட இந்த வழக்கில் அவற்றுக்குச் சார்பா கத் தீர்ப்பளிக்கப்பட்டிருப்பது குறித்து ட்ரான் தோ என்கா அதிர்ச்சியும் கவலையும் வெளியிட்டிருக்கிறார். தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீடு செய்யப்போவதாகவும் கூறியிருக்கிறார்.

அன்றைய அமெரிக்காவின் சட்டங்க ளுக்கு அமைய அதற்குக் கட்டுப்பட்டே செயற்பட்டதாக கம்பனிகளின் சார்பில் வாதாடிய சட்டவாளர் குறிப்பிட்டிருந்தார். Bayer-Monsanto நிறுவனத்தின் சட்டவாளர், "இறைமையுள்ள ஒரு நாட்டின் போர்க் காலத்தில் நடந்த சம்பவங்கள் குறித்துத் தீர்ப்பளிப்பதற்கு பிரெஞ்சு நீதி மன்றம் ஒன்றுக்கு நியாயாதிக்கம் கிடையாது" என்று வாதிட்டார்.

பாரிஸ் நகருக்கு வெளியே எவ்றி என்னும் நகரில் உள்ளூர் நீதிமன்றம் ஒன்றில் (Le tribunal d'Évry) இந்த வழக்கு கடந்த 2014 இல் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அது கடந்த ஜனவரி மாதம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

யுத்தத்தின் போது வியட்நாம் காடுகள் மீது அமெரிக்கா பெருவாரியான நச்சுக் குண்டுகளை வீசியது. அடர்ந்த காடு களில் இருந்த கம்யூனிஸ்ட் கெரில்லாக் களின் மறைவிடங்களை அழிப்பதற்காக வீசப்பட்ட இரசாயனக் குண்டுகள் ஏற்படுத்திய சூழல் தாக்கம் பல தசாப்தங்கள் கடந்து இன்னமும் நீடிக்கிறது.

வியட்நாமில் இன்றைக்கும் உடல்குறை பாடுகளுடன் ஏராளமான குழந்தைகள் பிறப்பதற்கு நச்சுக் குண்டுகளின் தாக்கமே காரணம் என்று சொல்லப்படுகிறது. 1962 - 1971 காலப்பகுதியில் நிகழ்ந்த அமெரிக்காவின் அந்த இராணுவ நடவடிக்கை "ஏஜென்ட் ஒரேஞ்" (Agent Orange) என்று அழைக்கப்படுகிறது. அமெரிக்கப் படைகள் அதி உயர் நச்சுத்தன்மை கொண்ட விவசாயக் களை கொல்லி இரசாயன மருந்துகளை (ultra-toxic herbicide) செறிவு கூடிய அளவில் வீசிக் காடுகளைக் கருக்கி அழிந்தன. போராளிகளின் முன்னேற்றத்தைத் தடுக்கவும் அவர்களது உணவு மூலங்களை அழிக்கவும் பல மில்லியன் கலன்கள் இரசாயன நச்சுக் களைநாசனி வான்வழியே விசிறப்பட்டது.

வியட்நாம் யுத்தத்தில் நிகழ்ந்த போர்க் குற்றமாகவும் இயற்கை அழிப்புக் குற்றமாகவும் ("ecocide") கருதப்படுகின்ற இரசாயனக் குண்டு வீச்சில் பாவிக்கப்பட்ட நச்சுக் களை கொல்லிகளை உற்பத்தி செய்த, விநியோகித்த முக்கிய 14 கம்பனிகளுக்கு எதிராகவே பிரான்ஸில் வழக்குத் தொடுக்கப்பட்டது. ஜேர்மன் - அமெரிக்க களை கொல்லித் தயாரிப்பு நிறுவனமாகிய Bayer-Monsanto மற்றும் அமெரிக்கப் பல் தேசியக் கம்பனி ahd Dow Chemical ஆகியனவும் அவற்றில் அடங்கும்.

ட்ரான் தோ என்கா தனது இருபதாவது வயதில் வியட்நாம் கம்யூனிஸ்ட் போராளியாக இருந்தவர். பத்திரிகையாளராகவும் பணியாற்றியவர். தற்போது பிரான்ஸில் வசிக்கும் அவர் வியட்நாம் போரினதும் அமெரிக்க நச்சுக் குண்டு வீச்சுக்களின தும் வாழும் சாட்சியாகத் தன்னை முன்னிறுத்தி நீண்ட காலமாக நீதி கோரி போராடி வருகிறார்.

தனது முதுமையில் புற்றுநோய், காசநோய் என்பவற்றால் பீடிக்கப்பட்ட நிலையில் வாழும் அவர், அமெரிக்க நச்சுக் குண்டுகளின் காரணமாகப் பல்வேறு உடல் உபாதைகளுக்கு உள்ளாகியிருப்பதாகத் தெரிவித்து வருகிறார். அவரது மகள் ஒருவர் இருதய நோயினால் உயிரிழந்துள்ளார். பேரக் குழந்தைகள் பலரும் கூட நோய்களுக்கு இலக்காகி உள்ளனர். ■

# புலமைச் சிகரம்

**ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி**

மாதிரிப் பரீட்சை - 2
வினாத்தாள் II

நேரம் - 45 நிமிடம்
ஆசிரியர் - எஸ்.மயூரன்

கல்வி tv CHANNEL

40) குறுந்தூர ஓட்டப் போட்டியின் போது, ஆரம்பநிலையைக் காட்டும் உரு எது?



1. 2. 3. 4.

41) வருடத்தின் எல்லாக் காலப்பகுதிகளிலும் சந்தையில் கிடைக்கும் பழவகை எது?

1. மங்குஸதான் 2. அன்னாசி 3. பப்பாசி 4. லொபி

42) வத்தாளை, மரவள்ளி போன்ற கிழங்குப்பயிர்களின் கிழங்குகளை அரித்துண்ணும் பிராணி பின்வருவனவற்றுள் எது?

1.செவ்வெறும்பு 2. புள்ளப்பூச்சி 3. நத்தை 4. கறையான்

43) விலங்குகளால் மட்டும் தூர இடங்களுக்கு பரம்பலடையும் வித்துள்ள பழமாக அமையாதது.

1. புலிநகம் 2. குருவிச்சை 3. வாழை 4. மா

44) மனிதனுக்கு கழிச்சல் நோயைப் பரப்பும் பிராணி

1. நுளம்பு 2. வீட்டுஈ 3. எலி 4. பல்லி

45) நுளம்புகள் கடிக்காமல் விரட்ட உதவும் இயற்கை முறையாக அமையாதது எது?

1. உடலில் காவட்டம் புல்லெண்ணை தடவுதல்
2. துளசி இலைகளை புகையூட்டல்.
3. வேம்பு இலைத்தூள், பிண்ணாக்கை புகையூட்டல்
4. நுளம்புச் சுரள் பாவித்தல்.


46) அரச இலச்சினையிலுள்ள குறியீடுகள் குறித்து நிற்பவையின் தொடர்புகளின் தவறானது

1. நிறைகுடம் - சௌபாக்கியம் 2. தர்மசக்கரம் - அறநெறி
3. நெற்கதிர்கள் - தூய்மை 4. சந்திர சூரியன் - நிலைத்திருப்பு

47) இலங்கையில் மிக உயரமான மலையாகிய பேதுறுதாலகாலமலை அமைந்துள்ள மாகாணம்?

1. மத்திய மாகாணம் 2. ஊவா மாகாணம்
3. சப்பிரகமுவ மாகாணம் 4. வடமத்திய மாகாணம்

49) தண்ணீரைக் கொண்ட குவளையொன்றினுள், தேங்காய்யெண்ணெய், மண்ணெண்ணெய் என்பவற்றை சேர்த்து கலக்கும் போது தோன்றும் நிலையைக் காட்டும் உரு எது?





1. 2. 3. 4.

50) இலங்கையின் வடமத்திய மாகாணத்திலுள்ள மன்னம்பிட்டி புதியபாலம் காணப்படும் நாணயத்தாள் எது?

1. ரூபா 50 2. ரூபா 100 3. ரூபா 500 4. ரூபா 1000

51) படத்திலுள்ளவாறு நீர்க்குவளை ஒன்றினுள் பனிக்கட்டித் துண்டுகளை இட்டால், அவதானிக்கக் கூடிய மாற்றம் எது?

1. பனிக்கட்டி நீரினுள் அமிழும்
2. பனிக்கட்டி நீரினுள் மிதக்கும்
3. குவளையின் நீர்மட்டம் குறைவடையும்
4. குவளையிலுள்ள நீர் உறையத் தொடங்கும்.




52) மெல்லிய கம்பிகளை வெட்டவும், முறுக்கவும் உதவும் எளிய கருவி எது?



1. 2. 3. 4.

53) ஊசித்துளைக் கமராவின் ஊடாக அருகிலுள்ள கொக்கை அவதானிக்கும் போது தோன்றும் விதம்



1. 2. 3. 4.

54) கிராமப்புற விவசாயிகள் சூடடிக்குமிடத்தில் " பொலி " என எதனை அழைப்பர்?

1. நெற்கதிர் 2. வைக்கோல் 3. சாக்கு 4. நெல்


55.) வாகனம் ஒன்றினை செலுத்தும் சாரதியிடம் அவசியம் இருக்க வேண்டியது எது?

1. வாகன உரிமைச் சான்றிதழ் 2. வாகன சாரதி அனுமதிப் பத்திரம்
3. வாகன அடையாளப் பத்திரம் 4. மருத்துவச் சான்றிதழ்

56) சைக்கிள் ஓட்டிகள் வருடாந்த அனுமதிப்பத்திரத்தைப் பெற செல்ல வேண்டியது?

1. பிரதேச செயலகம் 2. மாவட்ட செயலகம்
3. பிரதேச சபை 4. கிராமசேவகர் அலுவலகம்


57) அருகிலுள்ள உபகரணத்தைப் பயன்படுத்துவதன் மூலம்



1. மழை பெய்வதால் எதிர்வு கூறலாம்
2. நாளாந்த மழைவீழ்ச்சியை அளவிடலாம்
3. வளிமண்டல மாற்றத்தை அறியலாம்.
4. மழைவீழ்ச்சியின் தன்மையைக் கூறலாம்.

58) புகைதுருத்தி பயன்படுத்தப்படும் கைத்தொழில் எது?

1. மட்பாண்டத் தொழில் 2. தச்சுக்கூடம்
3. கொல்லன் கம்மாலை 4. மாணிக்கக்கல் அகழ்தல்

59) 

அருகிலுள்ள உரு எதனைக் குறிக்கும்?

1. தீ விபத்து ஏற்படக் கூடிய இடம்
2. தீ பற்ற வைப்பது ஆபத்தானது
3. தீ பற்ற வைக்கத் தடை
4. கவனமாக இருக்கவும்

60. பாடசாலையில் விளையாடும் குழு விளையாட்டுக்களில் ஒரு அணியில் அதிக வீரர்கள் விளையாடும் குழு விளையாட்டு எது?

1. உதைபந்து 2. எல்லே 3. கபடி 4. கிரிக்கற்

# கொழும்பில் 'ட்ரோன்' ஊடாக போக்குவரத்து கண்காணிப்பு



பொலிஸ் விசேட அதிரடிப் படையின் ட்ரோன் கமராப் பிரிவு நேற்று தொடக்கம் வாகனப் போக்குவரத்து நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

இந்தத் தகவலை பொலிஸ் விசேட அதிரடிப் படையின் கட்டளை அதிகாரியும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான வருண ஜயசுந்தர தெரிவித்தார்.

கொழும்பு நகரின் வாகன நெரிசலைக் கட்டுப்படுத்துவதும், வீதிச் சட்டங்களை மீறும் சாரதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை எடுப்பதும் இதன் நோக்கமாகும்.

காலி வீதி, பாராளுமன்ற வீதி, கண்டி - நீர்கொழும்பு வீதிகள் ஆகிய இடங்களை இலக்காகக் கொண்டு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது எனவும் அவர் மேலும் கூறினார். (இ)

# 'ஷவ்வால்' தலைப்பிறையை தீர்மானிக்கும் மாநாடு இன்று

கொழும்பு, மே 12

ஷவ்வால் மாத தலைப் பிறையைத் தீர்மானிக்கும் மாநாடு கொழும்பு பெரிய பள்ளிவாசலில் இன்று இடம்பெறவுள்ளது.

மஹ்ரிப் தொழுகையின் பின்னர் ஷவ்வால் மாத தலைப் பிறையைத் தீர்மானிக்கும் மாநாடு நடைபெறவுள்ளது எனப் பெரிய பள்ளிவாசல் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கொழும்பு பெரிய பள்ளிவாசல் பிறைக்குழு உறுப்பினர்கள், அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா, முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம், வளிமண்டலவியல் திணைக்களம் ஆகியவற்றின் உறுப்பினர்கள் உள்ளிட்ட சிலர் இதில் கலந்துகொள்ளவுள்ளனர்.


ரமழான் மாதம் முழுவதும் நோன்பு நோற்ற முஸ்லிம் மக்கள் ஷவ்வால் மாத தலைப் பிறை தென்பட்டதுடன், ஈதுல் பித்ர் எனப்படும் நோன்புப் பெருநாளைக் கொண்டாடவுள்ளனர். (இ)

### 'சினோபார்ம்' அனுமதி தொடர்பில்

# ஜனாதிபதி ஊடக பிரிவு தகவலை மறுத்தது உலக சுகாதார ஸ்தாபனம்

கொழும்பு, மே 12

**'இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் உலக சுகாதார ஸ்தாபனத்தின் தலைவர் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பின் விளைவாக சினோபார்ம் தடுப்பூசி பாவனைக்கு அனுமதி கிடைத்தது' என்ற தகவலை உலக சுகாதார ஸ்தாபனம் மறுத்துள்ளது.**



இலங்கையின் கொரோனா நிலைமைகள் தொடர்பாக ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் கிங்ஸ்லி ரத்நாயக்க நேற்று மேற்படி கருத்து வெளியிட்டிருந்த நிலையில், உலக சுகாதார ஸ்தாபனம் அதனை மறுத்துள்ளது.

சீன உற்பத்தியான சினோபார்ம் தடுப்பூசியை அவசர பயன்பாட்டுக்கு அனுமதித்தமைக்கும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடனான கலந்துரையாடலுக்கும் தொடர்பில்லை என்று உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

"இலங்கைக்கு 6 இலட்சம் சினோபார்ம் தடுப்பூசி கிடைத்திருந்தாலும், அவற்றைப் பயன்படுத்துவதற்கு உலக சுகாதார ஸ்தாபனத்தின் அனுமதி வழங்கப்படவில்லை என்பதை ஜனாதிபதி உலக சுகாதார ஸ்தாபன தலைவரின் கவனத்துக்குக் கொண்டுவந்தார். உலக சுகாதார ஸ்தாபனத் தலைவர்-ஜனாதிபதி கோட்டாபய சந்திப்பின் விளைவாக சினோபார்ம் பாவனைக்கு அனுமதி கிடைத்தது" என்று ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் கருத்து வெளியிட்டிருந்தார்.

இந்நிலையில், இருவருக்கும் இடையிலான சந்திப்புக்கும் தடுப்பூசி அனுமதி வழங்கப்பட்டதற்கும் தொடர்பில்லை என்று உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது. (இ)

# மரக்கறி விலையில் ஏற்படவுள்ள மாற்றம்

நுவரெலியா, மே 12

அரசு, இரசாயன உர வகைகளை இறக்குமதி செய்யத் தடை விதித்திருக்கின்ற நிலையில், நுவரெலியா மாவட்டத்தில் ஒரு சில வியாபாரிகள் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி கொள்ளை இலாபம் பெருகின்ற வகையில் தங்களுடைய வியாபார நிலையங்களில் இரசாயன உர வகைகளையும் கிருமி நாசினிகளையும் பதுக்கி வைத்திருக்கின்றனர் என்று பாதிக்கப்பட்ட விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலைமை காரணமாக தற்போது அறுவடை மிகவும் குறைவடைந்துள்ளது. இதன் காரணமாக எதிர்வரும் காலங்களில் மரக்கறிகளின் விலைகள் 300 முதல் 400 அல்லது 500 ரூபா வரை விலை அதிகரிப்பதற்கான சாத்தியங்கள் உள்ளன எனவும் விவசாயிகள் கவலை வெளியிடுகின்றனர். (இ)

# புதிய வகை வைரஸ் தொற்றாளர்களுடன் நெருங்கி பழகியவர்களைத் தேடி வேட்டை

### களத்தில் இறங்கியது புலனாய்வு பிரிவு

கொழும்பு, மே 12

இலங்கையில் பரவும் புதிய வகை கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்களுடன் தொடர்புகளைப் பேணியவர்கள் மற்றும் நெருங்கிப் பழகியவர்களைத் தேடி புலனாய்வு அதிகாரிகள் குழுவொன்று விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

200 பேரைக் கொண்ட புலனாய்வு அதிகாரிகள், நாடு பூராகவும் பல்வேறு பிரதேசங்களுக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டு சம்பந்தப்பட்டவர்களை அடையாளம் கண்டு அந்த நபர்களைத் தனிமைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

புதிய தொற்றாளர்கள் புதிய வகை வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர் என்று ஸ்ரீ ஜய வர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஆய்வுக்குழு உறுதிப்படுத்தியிருந்தது.

இந்த வைரஸ் மற்றைய வைரஸை விடவும் பரவும் வேகம் அதிகமானது என்றும் ஆய்வுக்குழு குறிப்பிட்டிருந்தது.

இதன்படி தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர் என அடையாளம் காணப்பட்டுள்ள நபர்கள் தொடர்புகளைப் பேணிய மற்றும் நெருக்கமான நபர்களைத் தேடி புலனாய்வு அதிகாரிகள் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர் என்று பாதுகாப்பு அமைச்சின் தகவல்கள் தெரிவித்துள்ளன. (இ)

# தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய மேலும் 548 பேர் கைது!

கொழும்பு, மே 12

இலங்கையில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய மேலும் 548 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

முகக்கவசம் அணியாமை உட்பட தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 7 ஆயிரத்து 864 பேர் இதுவரை கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் 30ஆம் திகதி முதல் மே மாதம் 10ஆம் திகதி (நேற்றுமுன்தினம்) வரையான காலப்பகுதியிலேயே இந்தக் கைதுகள் இடம்பெற்றுள்ளன என்றும் பொலிஸ் பேச்சாளர் கூறினார்.

அதேவேளை, நாட்டில் பல பகுதிகளிலும் பொலிஸாரின் சோதனை மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகள் தொடர்கின்றன என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (இ)

# மேல் மாகாணத்தில் ஒரே நாளில் 1,200 பேருக்கு கொரோனா உறுதி

கொழும்பு, மே 12

நாட்டில் நேற்றுமுன்தினம் மட்டும் 2 ஆயிரத்து 624 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி, இலங்கையில் மூன்றாவது நாளாக கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 500 ஐக் கடந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதில் 51 பேர் வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்பியவர்கள் எனவும், ஏனையோரில் கம்பஹா மாவட்டத்திலேயே அதிக தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் எனவும் தொற்று நோயியல் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, மேல் மாகாணத்தில் மாத்திரம் நாளொன்றுக்கு ஆயிரத்துக்கு அதிக தொற்றாளர்கள் இனங்காணப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதில் நேற்றுமுன்தினம் மேல் மாகாணத்தில் மாத்திரம் 1,234 தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர். இவர்களில் அதிகளவானோர் கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாவர். அதற்கமைய கம்பஹாவில் 551 தொற்றாளர்களும், களுத்துறையில் 326 தொற்றாளர்களும், கொழும்பில் 321 தொற்றாளர்களும் இனங்காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை, நேற்றுமுன்தினம் அடையாளம் காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களில் பதுளை மாவட்டத்தில் 23 பேரும், அம்பாறை மாவட்டத்தில் 13 பேரும், திருகோணமலை மாவட்டத்தில் 36 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒருவரும், நுவரெலியா மாவட்டத்தில் 184 பேரும், குருநாகல் மாவட்டத்தில் 177 பேரும், காலி மாவட்டத்தில் 170 பேரும், இரத்தினபுரி மாவட்டத்தில் 128 பேரும், கண்டி மாவட்டத்தில் 50 பேரும், புத்தளம் மாவட்டத்தில் 46 பேரும், யாழ் மாவட்டத்தில் 109 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 22 பேரும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 26 பேரும் அடங்குகின்றனர். (இ)

# மேலும் ஆறு பிரதேசங்கள் கொரோனாவால் முடக்கம்

கொழும்பு, மே 12

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக நாட்டில் மேலும் 6 கிராம சேவகர் பிரிவுகள் நேற்றுக் காலை முதல் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என்று இராணுவத் தளபதி சவேந்திர சில்வா அறிவித்துள்ளார்.

இதன்படி மாத்தறை மாவட்டத்தில் உயன்வத்த, உயன்வத்த வடக்கு ஆகிய கிராம சேவகர் பிரிவுகளும், கண்டி மாவட்டத்தில் வலகம்பாய கிராம சேவகர் பிரிவும் இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

அத்துடன், மாத்தளை மாவட்டத்தில் உடஹவிட்ட கிராம சேவகர் பிரிவும், புத்தளம் மாவட்டத்தில் மெதகிரியான கிராம சேவகர் பிரிவும், குருநாகல் மாவட்டத்தில் நிகதலுபொத கிராம சேவகர் பிரிவும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. (இ)



## இஸ்ரேலின் விமான தாக்குதலில் 21 பலஸ்தீனியர்கள் உயிரிழப்பு!

கிழக்கு ஜெருசலேம், மே 12

இஸ்ரேல் ஆக்கிரமிப்பு பலஸ்தீன பகுதிக்குள் இஸ்ரேலிய விமானப் படை நடத்திய வான்வழித் தாக்குதலில் குழந்தைகள் உட்பட குறைந்தது 21 பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டனர் என்று பலஸ்தீன சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இஸ்ரேலின் கட்டுப்பாட்டிலுள்ள ஜெருசலேமில் அல் - அக்சா மசூதியில் கடந்த சனிக்கிழமை கூடிய பலஸ்தீனர்களை இஸ்ரேல் இராணுவம் தாக்கியது. திங்கட்கிழமையும் அங்கு கூடி தொழுகையில் ஈடுபட்ட பலஸ்தீனியர்கள் மீது இஸ்ரேல் இராணுவமும் பொலிஸாரும் தாக்குதலை நடத்தின.

இந்தத் தாக்குதல்களை தொடர்ந்து, பலஸ்தீன விடுதலைக்காக போராடும் ஹமாஸ் அமைப்பு இஸ்ரேல் பகுதிகளை நோக்கி றொக்கட் தாக்குதல்களை நடத்தியது என்று இஸ்ரேல் கூறியது.

இதைத் தொடர்ந்தே, பலஸ்தீன பகுதிகள் மீது இஸ்ரேல் விமானங்கள் குண்டுவீச்சு தாக்குதலை நடத்தின. இதில் குழந்தைகள் உட்பட 21 பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டனர்.

இதனிடையே, அல்-அக்சா மசூதியில் கூடிய பலஸ்தீனர்கள் மீது திங்கட்கிழமையும் இஸ்ரேல் பொலிஸார் தாக்குதல் நடத்தியது உலக நாடுகளை அதிர்ச்சியடையச் செய்துள்ளது.

அல் அக்சா மசூதியில் ரமழானை முன்னிட்டு தொழுகைக்காக சுமார் 90,000 பாலஸ்தீனர்கள் கூடியிருந்தபோது அங்கு வந்த இஸ்ரேல் பொலிஸார் தொழுகையில் ஈடுபட்டிருந்தவர்களை வலுக்கட்டாயமாக வெளியேற்றினர். இதன்போது ஏற்பட்ட மோதலில் 300இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் காயமடைந்தனர். (ஐ)

## ரஷ்ய பாடசாலையில் தாக்குதல் 8 சிறுவர்கள் உட்பட 9 பேர் பலி!

மொஸ்கோ, மே 12

ரஷ்ய நகரமான கசானில் அமைந்துள்ள பாடசாலை ஒன்றில் நடத்தப்பட்ட துப்பாக்கி சூட்டு சம்பவத்தில் 8 சிறுவர்கள் உட்பட மொத்தம் 9 பேர் உயிரிழந்தனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

ரஷ்ய தலைநகர் மொஸ்கோவின் கிழக்கே 820 கி.மீ தொலைவிலுள்ள பாடசாலை ஒன்றில் நடந்த இந்தச் சம்பவத்தில் ஆசிரியர் ஒருவரும் உயிரிழந்தார்.

அடையாளம் தெரியாத இரு நபர்கள் இந்த துப்பாக்கிச் சூட்டை நடத்தினர் என்றும், அவர்களில் 17 வயது இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். மேலும், இந்தச் சம்பவத்தில் 9 பேர் உயிரிழந்தனர். 12 பேர் காயமடைந்துள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# துப்பாக்கி சூட்டு சம்பவங்களில் அமெரிக்காவில் 9 பேர் மரணம்!

நியூயோர்க், மே 12

அமெரிக்காவில் கொலொராடோ மற்றும் மேரிலேண்ட் மாகாணங்களில் நிகழ்ந்த இருவேறு துப்பாக்கி சூட்டு சம்பவங்களில் 9 பேர் கொல்லப்பட்டனர்.

கொலரோடா மாநிலத்தின் பிரிங்ஸின் கிழக்குப் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை பிறந்த நாள் கொண்டாட்ட நிகழ்வு ஒன்று நடைபெற்றது. அங்கு வந்த ஒரு நபர் நிகழ்ச்சியில் பங்கேற்றவர்களை துப்பாக்கியால் சுட்டார். இதில் 6 பேர் உயிரிழந்தனர். தாக்குதல் நடத்திய நபர் தன்னையும் துப்பாக்கியால் சுட்டு உயிரிழந்தார். இந்தக் கொலைகளுக்கான காரணம் தெரியவரவில்லை.

இதேபோன்று, மேரிலாண்ட் மாகாணத்தில் பால்டிமோரின்புகர் பகுதியில் சனிக்கிழமை காலை நடந்த சம்பவத்தில் 3 பேர் கொல்லப்பட்டனர்.

56 வயது நபர் ஒருவர் தனது அயல் வீட்டுக்குள் புகுந்து இருவரை சுட்டுக் கொண்டார். சூட்டுச் சத்தம் கேட்டு வெளியே வந்த மேலும் இரு அயல் வீட்டாரையும் அவர் சுட்டார். இதில் ஒருவர் உயிரிழந்தார். மற்றொருவர் காயமடைந்துள்ளார்.

துப்பாக்கிச் சூட்டை நடத்திய பின்னர் அந்த நபர் தனது வீட்டுக்கு தீ வைத்தார். இதில் மற்றொரு வீட்டுக்கும் தீ பரவியது. விடயம் அறிந்து அங்கு சென்ற பொலிஸார் குறித்த நபரை துப்பாக்கியால் சுட்டுக் கைது செய்தனர். எனினும், அவரும் உயிரிழந்துவிட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# கங்கை நதியில் மிதக்கும் சடலங்கள்: இந்தியாவுக்கு பேராபத்தாக மாறும்?

இந்தியாவின் கங்கை நதியில் மிதக்கும் சடலங்கள் அந்நாட்டுக்கு பேராபத்தாக மாறும் என்று அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் கங்கை நதியில் 40இற்கும் மேற்பட்ட சடலங்களை மிதந்தன என்று பி.பி.ஸி. தெரிவித்துள்ளது. ஆனால், சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட சடலங்கள் இவ்வாறு கங்கை நதியில் மிதந்தன என்று உள்ளூர் ஊடகங்கள் தெரிவித்தன.

இவ்வாறு மிதக்கும் சடலங்களை இரையாக்கும் விலங்குகள் தொடர்பான படங்கள் வெளியாகி பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன.

இந்தியாவின் பீஹார் மாநிலத்தின் பக்ஸர் மாவட்டத்தின் சௌசா பகுதியிலேயே இந்தச் சம்பவம் தொடர்ந்து வருகின்றது.

இதுவரை 30 -40 சடலங்கள் மீட்கப்பட்டு தகனம் செய்யப்பட்டுள்ளன. இந்த சடலங்கள் கொரோனா தொற்றால் உயிரிழந்தவர்களாக இருக்கலாம் என்றும் சந்தேகம் தெரிவிக்கப்படுகின்றது. மேலும், இறந்தவர்களை தகனம் செய்வதற்காக விறகுகளுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது. இதனால், சடலங்களை



எரிக்கப்பட முடியாமல் கங்கை யாற்றில் மிதக்கவிடப்படுகின்றன என்று உள்ளூர் ஊடகவியலாளர் ஒருவர் தெரிவித்தார்.

சௌசா பகுதிக்கு 8 கி.மீ. தொலைவில் இருந்தும் சடலங்கள் கொண்டு வரப்படுகின்றன. தனியார் மருத்துவமனைகளில் கொள்ளை நடந்துள்ளது. தங்கள் அன்புக்குரியவர்களை காப்பாற்ற செலவு செய்த பின்னர், இறந்தவர்களுக்கான செலவுகளை செய்வதற்கு அவர்களிடம் பணம் இல்லை. அம்புலன்ஸ் வாகனத்திற்கு 2 ஆயிரம் இந்திய ரூபாய் - நம் நாட்டு மதிப்பில் சுமார் 5 ஆயிரம் ரூபாய் கேட்கின்றனர். இதனால், வேறு வழியின்றிய அவர்களுக்கு கங்கை தாயே உதவி செய்கிறாள். அவர்கள் சடலங்களை கங்கையில் மிதக்க விடுகிறார்கள் என்றும் அவர் கூறினார்.

இவ்வாறு இறக்கும் சடலங்கள் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு இறந்தவர்கள் என்றால் அப்பகுதியில் தொற்று பரவும் பேராபத்து காணப்படுகின்றது என்றும், அந்த சடலங்ளை மீட்டு தகனம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுள்ளதாக சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ)

# 2015ஆம் ஆண்டே கொரோனாவை உயிரி ஆயுதமாக்க சீனா பரிசீலனை!

## அமெரிக்காவுக்கு கிடைத்த அறிக்கைகளில் தகவல்!

லண்டன், மே 12

கடந்த 2015ஆம் ஆண்டே கொரோனா வைரஸை ஆயுதமாக்குவது குறித்து ஆராய்ச்சி செய்து உயிரி ஆயுதங்கள் மூலம் போரிடும் மூன்றாம் உலகப் போர் குறித்து சீன இராணுவ விஞ்ஞானிகள் கணித்திருக்கலாம் என்று தகவல் வெளியாகியுள்ளது.

பிரிட்டனின் 'தி சன்' நாளிதழ் அமெரிக்க வெளிவிவகார அமைச்சுக்கு கிடைத்த ஆய்வறிக்கைகளை சுட்டிக்காட்டி இவ்வாறு செய்தி வெளியிட்டுள்ளது.

சீன இராணுவ விஞ்ஞானிகள், அந்நாட்டின் மூத்த பொது சுகாதார அதிகாரிகள் கொரோனா வைரஸின் தோற்றம் குறித்து மேற்கொண்ட ஆராய்ச்சி தொடர்பாக கடந்த 2015ஆம் ஆண்டு எழுதிய ஆய்வறிக்கைகளை அமெரிக்க அதிகாரிகள் பெற்றுள்ளனர்.

அந்த ஆய்வறிக்கைகளில் சார்ஸ் கொரோனா வைரஸ் உயிரி ஆயுதங்களின் புதிய சகாப்தம் என்று சீன விஞ்ஞானிகள் விவரித்துள்ளனர். மனித இனத்தை பாதிக்கக்கூடிய நோயாக தோன்றும் வகையில் வைரஸ்களை செயற்கையாக கையாண்டு, அவற்றை ஆயுதமாக்கி முன்னெப்போதும் கண்டிராத வகையில் அவற்றை பொதுவெளியில் கட்டவிழத்துவிடுவது குறித்து அந்த ஆய்வறிக்கைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரி ஆயுத தாக்குதல் மூலம் எதிரி நாட்டின் மருத்துவ கட்டமைப்பை நிலைகுலைய வைக்கலாம் என்றும் அந்த ஆய்வறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் மூலம் கடந்த 2015ஆம் ஆண்டே கொரோனா வைரஸை ஆயுதமாக்குவது குறித்து ஆராய்ச்சி செய்து உயிரி ஆயுதங்கள் மூலம் போரிடும் மூன்றாம் உலகப் போர் குறித்து சீன இராணுவ விஞ்ஞானிகள் கணித்திருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

கடந்த 2003ஆம் ஆண்டு சீனாவை தாக்கிய சார்ஸ் நோயும் பயங்கரவாதிகளால் வேண்டுமென்றே கட்டவிழத்துவிடப்பட்ட உயிரி ஆயுதமாக இருக்கலாம் என்ற சந்தேகமும் அந்த ஆய்வறிக்கைகள் மூலம் ஏற்பட்டுள்ளது என அந்த நாளிதழில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்த செய்தி முதலில் 'தி அவுஸ்திரேலியன் நாளிதழில் வெளியானது. சீனாவின் ஆய்வறிக்கைகளை ஆய்வு செய்த இணையவழி குற்றப்பிரிவு வல்லுநர் றொபேர்ட் பாட்டர் என்பவர் அந்த ஆய்வறிக்கைகள் போலியானவை அல்ல என்று 'தி அவுஸ்திரேலியன்' நாளிதழிடம் தெரிவித்தார்.

சீனாவில் 2019 டிசம்பரில் கொரோனா வைரஸ் பரவ ஆரம்பித்தது. அங்குள்ள வுஹான் நகர வைரஸ் ஆய்வகத்தில் இருந்து கொரோனா வைரஸ் வெளியேறியிருக்கலாம் என்ற சந்தேகம் தொடர்கிறது. எனினும், இன்றுவரை இதற்கான ஆதாரங்கள் கண்டறியப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மீண்டும் வருகிறார் மலிங்க!

கொழும்பு, மே 12

இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்க மீண்டும் அணிக்கு திரும்ப வாய்ப்புள்ளது என்று தெரிவு குழு தலைவர் பிரமோத்ய விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மலிங்கவை இருபது - 20 உலகக்கிண்ணத் தொடரில் பங்கேற்க செய்ய வாய்ப்புள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

டெஸ்ட், ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்றுவிட்ட மலிங்க, இருபது - 20 போட்டிகளில் ஓய்வை அறிவிக்கவில்லை. இருபது - 20 இற்கான இலங்கை அணியின் தலைவரான அவர், பயிற்சிகளில் பங்கேற்காமையால் அந்தப் பதவி தசூன் சானகவுக்கு வழங்கப்பட்டது.



இந்நிலையில், பிரமோத்ய விக்கிரமசிங்க மேலும் கூறுகையில், மலிங்கவுடன் விரைவில் பேசுவோம். வருங்கால இருபது - 20 தொடர்கள், இருபது - 20 உலகக் கிண்ணத்துக்கான எங்களின் திட்டங்களில் அவரும் உள்ளார். அடுத்தடுத்து இரு உலகக் கிண்ணத் தொடர்கள் நடக்கவுள்ளன. எனவே, அவருடன் நாங்கள் பேசவுள்ளோம் - என்றார்.

இது தொடர்பில் மலிங்க கூறுகையில், டெஸ்ட், ஒருநாள் கிரிக்கெட்டிலிருந்துதான் நான் ஓய்வு பெற்றுள்ளேன், இருபது - 20 போட்டியிலிருந்து அல்ல. என்னை தெரிவுக் குழு எப்படி பயன்படுத்திக் கொள்ளப் போகிறார்கள் என்பதை அறியநானும் ஆவலாக உள்ளேன். நீண்ட இடைவெளிக்குப் பிறகு விளையாடினாலும் என்னால் சிறப்பாக பங்களிக்க முடியும் என்பதை நான் பலமுறை நிரூபித்துள்ளேன்", என்றார். (ஐ)



# மட்ரிட் ஓப்பன் ரென்னிஸ் சம்பியனானார் ஸ்வெரேவ்!

மட்ரிட், மே 12

ஜேர்மன் ரென்னிஸ் நட்சத்திரமான அலெக்சாண்டர் ஸ்வெரேவ், இத்தாலிய வீரரான மேடியோ பெரெட்டினியை வீழ்த்தி மட்ரிட் ஓப்பன் போட்டியில் சம்பியனானார்.

மட்ரிட் ஓப்பன் சர்வதேச ரென்னிஸ் போட்டி ஸ்பெயினில் நடைபெற்றது.

களிமண் தரை போட்டியான இதில் ஞாயிறு இரவு நடந்த ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப்போட்டியில் உலக தரவரிசையில் 6ஆவது இடத்தில் உள்ள ஜேர்மனி வீரர் அலெக்சாண்டர் ஸ்வெரேவ், 10ஆவது இடத்தில் இருந்த இத்தாலியின் மேடியோ பெரேட்டினியை எதிர்கொண்டார்.

2 மணி 40 நிமிடம் நடந்த பரபரப்பான இந்த ஆட்டத்தில் 6-7 (8), 6-4, 6-3 என்ற செற் கணக்கில் பெரெட்டினியை வீழ்த்தி ஸ்வெரேவ் சம்பியன் ஆனார்.

ஸ்வெரேவ் கால் இறுதியில் 5 முறை சம்பியனான ரபெல் நடாலையும் (ஸ்பெயின்), அரை இறுதியில் டொமினிக் திம்மையும் (ஆஸ்திரியா) வீழ்த்தியிருந்தார்.

24 வயதான அலெக்சாண்டர் ஸ்வெரேவ் மட்ரிட் ஓப்பன் பட்டத்தை வெல்வது இது 2 ஆவது முறையாகும். ஏற்கனவே 2018 ஆம் ஆண்டில் இந்த பட்டத்தை வென்றிருந்தார். அவர் வென்ற 1000 தரவரிசை புள்ளிகள் கொண்ட 4 ஆவது சர்வதேச பட்டம் இதுவாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இந்திய அணியின் பயிற்றுநராக டிராவிட்!

புதுடில்லி, மே 12

இலங்கைக்கு வந்து, ஒருநாள், இருபது - 20 தொடர்களில் விளையாடவுள்ள இந்திய அணியின் பயிற்றுவிப்பாளராக அந்த அணியின் முன்னாள் வீரர் ராகுல் டிராவிட் நியமிக்கப்படலாம் என்று கூறப்படுகின்றது.

இங்கிலாந்தில் ஓகஸ்ட் 4 ஆம் திகதி தொடங்கும் டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது இந்திய அணி.

இந்நிலையில் முன்னணி வீரர்கள் இல்லாத இந்திய அணி ஜூலை மாதம் இலங்கை வருகிறது.

இந்த அணியில், ஷிகர் தவான், ஹார்திக் பாண்ட்யா, குருணல் பாண்ட்யா, தீபக் சஹார், வருண் சக்ரவர்த்தி, பிரித்வி ஷா, விஜய் சங்கர் போன்ற வீரர்கள் பங்கேற்பர்

இந்த அணிக்கான பயிற்றுவிப்பாளராக ராகுல் டிராவிட் நியமிக்கப்படலாம் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்தியா ஏ, இந்தியாவின் 19 வயதுக்கு உட்பட்ட அணிகளின் பயிற்றுவிப்பாளராகவும் தேசிய கிரிக்கெட் அக்கடமியின் தலைவராகவும் ராகுல் டிராவிட் இப்பொறுப்புக்குச் சரியானவர் என்று இந்திய கிரிக்கெட் சபை கருதுவதாகக் கூறப்படுகின்றது. (ஐ)





# ஏப்ரல் மாத சிறந்த வீரராக பாபர் அஸாம் தெரிவானார்

துபாய், மே 12

சர்வதேச கிரிக்கெட் சபையின் (ஐ.சி.சி) நடப்பு ஆண்டுக்கான ஏப்ரல் மாதத்தின் சிறந்த வீரராக பாகிஸ்தான் அணியின் தலைவரும் துடுப்பாட்ட வரிசையில் முதலிடத்தில் இருப்பவருமான பாபர் அஸாம் தெரிவாகியுள்ளார்.

அண்மையில் தென்னாபிரிக்காவிற்கு எதிரான தொடரில் அனைத்து கிரிக்கெட் வடிவங்களிலும் அவரது நிலையான மற்றும் சிறப்பான துடுப்பாட்டத்திற்காக ரசிகர்கள் மற்றும் ஐ.சி.சி வாக்களிக்கும் அக்கடமியால் ஏப்ரல் மாத வெற்றியாளராக தெரிவானார்.

2021 ஏப்ரல் மாதத்திற்கான சிறந்த வீராங்கனையாக அவுஸ்திரேலிய அணியின் அலிசா ஹீலி தேர்வுசெய்யப்பட்டுள்ளார்.

ஹீலி நியூசிலாந்திற்கு எதிராக மூன்று ஒருநாள் போட்டிகளில் விளையாடினார். 51.66 சராசரி மற்றும் 98.72 ஸ்ட்ரைக் வீதம் 155 ஓட்டங்கள் பெற்றார்.

சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) சார்பில் மாதாந்தம் சிறந்த வீரர், வீராங்கனை தேர்வு செய்யப்பட்டு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்கத்கது. (ஐ)

# இலங்கை கிரிக்கெட் அணி புதுமுக வீரர்களுக்கு தொற்று!

கொழும்பு, மே 12

இலங்கை அணியின் புதுமுக வீரர்களுக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவர்கள் பங்களாதேஷூக்கு எதிரான ஒருநாள் தொடரில் பங்கேற்க இருந்தவர்கள் என்று தெரிய வருகின்றது.

இலங்கை அணியில் இணைத்துக் கொள்ளப் படவிருந்த தனஞ்சய லக்சன், இஷான் ஜெயரட்ண ஆகியோருக்கே இவ்வாறு தொற்று உறுதிப்படுத்தப் பட்டுள்ளுது. இதனால், இவர்கள் பங்களாதேஷூக்கு எதிரான தொடரில் பங்கேற்க மாட்டார்கள் என்று இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

இவர்கள் இருவரும் சுகாதார ஆலோசனைகளுக்கு அமைவாக மருத்துவ சிகிச்சைகளை பெற்றுவருகின்றனர். எனினும், புதுமுக வீரரான ஷிரான் பெர்னாண்டோவுக்கு கொரோனா தொற்று இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும், பங்களாதேஷ் அணியுடனான இலங்கை கிரிக்கெட் குழாமில் பெயரிடப்பட்டுள்ளார் என்று கூறப் படுகின்றது. (ஐ)

# மக்களைப் பாதுகாக்க தீர்க்கமான முடிவெடுக்க சர்வகட்சி கூட்டத்தை உடனடியாக கூட்டுங்கள்

## அரசிடம் சஜித் அணி வலியுறுத்து



கொழும்பு, மே12

**கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தி நாட்டு மக்களைப் பாதுகாப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுப்பது சம்பந்தமாக ஆராய்வதற்காக உடனடியாக சர்வகட்சிக் கூட்டத்தைக் கூட்டுமாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.**

ஐக்கிய மக்கள் சக்தியின் சிரேஷ்ட உப தலைவரான கபீர் ஹாசீம் எம்.பி. மேற்படி வேண்டுகோளை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

“கொரோனா வைரஸ் பரவலின் முதலாவது அலையின் போது அரசு, சர்வகட்சிக் கூட்டத்தைக் கூட்டியது. எதிர்க்கட்சியின் சார்பில் தலைவர் சஜித் பிரேமதாஸவும், செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரவும் பங்கேற்றனர். இரண்டு கூட்டங்களுக்கு மாத்திரமே அவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. முதலாவது அலையை சிறப்பாகக் கட்டுப்படுத்துகின்றோம், எனவே, முழுப் புகழும் அரசுக்கே கிடைக்கவேண்டும் என்ற எண்ணத்தில் எதிர்க்கட்சிகளை அரசு இவ்வாறு புறக்கணித்திருக்கக்கூடும்.

ஆனால், இன்று என்ன நடக்கின்றது? வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதில் அரசு தோல்வி கண்டுள்ளது. இந்த நிலைமை தொடருமானால் நெருக்கடியான நிலைமை உருவாகக்கூடும். எனவே, மக்களைப் பாதுகாத்து, நாட்டை மீட்டெடுக்க வேண்டும்.

இதற்காக சர்வகட்சித் தலைவர் கூட்டத்தைக் கூட்டுமாறு அரசிடம் கோரிக்கை விடுக்கின்றோம். அனைத்து கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கவும். யோசனைகளை, ஆலோசனைகளை உள்வாங்கவும். நாட்டை மீட்க இணைந்து செயல்படுவோம். பிறகு அரசியல் செய்யலாம்” - என்றார். (இ)

### கொரோனா பரவல் தீவிரத்தையடுத்து இலங்கைக்கு குவைத்தும் தடைவிதிப்பு

கொழும்பு, மே 12

இலங்கை உட்பட நான்கு நாடுகளுடனான நேரடி விமானப் போக்குவரத்தைக் குவைத் தடை செய்துள்ளது.

தெற்காசிய நாடுகளில் கொரோனா பரவல் தீவிரமடைந்துள்ளதைத் தொடர்ந்து, இலங்கை, பாகிஸ்தான், நேபாளம் மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளுடனான நேரடி விமானப் போக்குவரத்தைத் தடை செய்வதாக குவைத் நேற்று அறிவித்துள்ளது.

மேற்படி நான்கு நாடுகளையும் சேர்ந்த பயணிகள் மூன்றாவது நாடொன்றில் 14 நாட்கள் தனிமைப்படுத்தலை நிறைவு செய்துகொண்டு, குவைத்துக்குள் வர அனுமதி வழங்கப்படும் என்று அந்நாட்டு சிவில் விமானப் போக்குவரத்துத் திணைக்களம் அறிவித்துள்ளது. (இ)

# 500 மில்லியன் அமெரிக்க டொலர்கள்: இலங்கைக்கு கொரியா சலுகை கடன்

## உடன்படிக்கையில் கைச்சாத்து



கொழும்பு, மே 12

இலங்கைக்கு 500 மில்லியன் அமெரிக்க டொலர்களைச் சலுகைக் கடனாக வழங்க கொரிய ஏற்றுமதி - இறக்குமதி வங்கி (எக்ஸிம்) முன்வந்துள்ளது.

கொரிய நிதி மற்றும் மூலோபாய அமைச்சின் கீழ் இயங்கும் எக்ஸிம் வங்கியின் பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியத்தின் ஊடாக கொரிய அரசு இந்த நிதியை இலங்கைக்கு வழங்குகின்றது.

இதற்கான உடன்படிக்கையில் கொரிய எக்ஸிம் வங்கி கைச்சாத்திட்டுள்ளது என நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

குறித்த உடன்படிக்கையில் இலங்கை அரசு சார்பாக நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர். ஆட்டிகலவும், கொரிய குடியரசு சார்பாக கொரியத் தூதுவர் வூன்ஜின் நேற்றுமுன்தினம் கையெழுத்திட்டனர்.

சலுகைக் கடனை சுமார் 0.15% - 0.20% வரையான வட்டி விகிதத்தில் கொரிய அரசு வழங்க முன்வந்துள்ளது.

அத்தோடு, கடனை மீளச் செலுத்துவதற்கான காலம் 40 வருடங்களாகவும், அவகாச காலம் 10 வருடங்களாகவும் கொரிய அரசு அறிவித்துள்ளது.

கொரிய எக்ஸிம் வங்கியானது பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியத்தின் ஊடாக கொழும்பு - காலி வீதி அபிவிருத்திக்காக 1990இல் முதன் முதலில் நிதி ஒதுக்கீடு செய்தது என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# விமான நிலையங்கள் மூடப்படுமா? வரும் நாட்களில் தீர்க்கமான முடிவு

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு



கொழும்பு, மே 12.

விமான நிலையங்களை மூடுவதற்கு இதுவரை முடிவு எடுக்கப்படவில்லை என்று சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார். எனினும், கொரோனா ஒழிப்புக்கான தேசிய செயற்பாட்டு மத்திய நிலையத்தின் வழிகாட்டலுக்கு ஏற்ப எதிர்வரும் நாட்களில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

மேலும், சுகாதாரத் துறையினரின் அறிவுறுத்தலுக்கு அமைய வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தொழிலாளர்களை நாட்டுக்கு அழைத்துவரும் பணி தொடரும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

விமான நிலையங்களில் மேற்கொள்ளப்படும் தனிமைப்படுத்தல் நடைமுறைகள் அரச தனிமைப்படுத்தல் மையங்களைப் போலவே தொடரும் அதே வேளை, தற்போதைய சூழ்நிலையில் பணியாற்றுவதற்கு விமான நிலைய ஊழியர்களுக்கு விசேட அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார்.

வெளிநாடுகளில் இருந்து வரும் இலங்கைத் தொழிலாளர்களிடையே கொரோனாத் தொற்று எண்ணிக்கை அதிகரித்துள்ள போதிலும், அவர்களிடமிருந்து இதுவரை கொரோனா கொத்தணிகள் உருவாகவில்லை என்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க சுட்டிக்காட்டினார். (இ)

# கர்ப்பவதிகளுக்கு தடுப்பூசி போடுவதில் எந்தச சிக்கல்களும் இல்லை

## மகப்பேறு வைத்திய சங்கத் தலைவர் அறிவிப்பு



கொழும்பு, மே 12

கர்ப்பவதி பெண்களுக்குக் கொரோனாத் தடுப்பூசி போடுவதில் எந்தச் சிக்கலும் இல்லை என ஆய்வுகளில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என மகப்பேறியல் மற்றும் மகப்பேறு வைத்திய சங்கத் தலைவர் மருத்துவர் பிரதீப் டி சில்வா தெரிவித்தார்.

பிரிட்டனில் உள்ள மருத்துவ நிபுணர்கள் மேற்கொண்ட ஆய்வுகளுக்கு அமைய, தடுப்பூசி செலுத்தப்பட்ட கர்ப்பவதி பெண்களுக்கு இதுவரை எவ்வித பக்கவிளைவுகளும் ஏற்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டில் தற்போது நிலவும் அபாயகரமான சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு கர்ப்பவதி பெண்களுக்குக் கூடிய விரைவில் தடுப்பூசி செலுத்த வேண்டியது அத்தியாவசியமானது எனவும் அவர் வலியுறுத்தினார்.

அதன்படி, கர்ப்பவதி தாய்மார்கள், கர்ப்பம் தரிக்க எதிர்பார்த்துள்ள பெண்கள் மற்றும் தாய்ப்பால் கொடுக்கும் தாய்மார்களுக்கு இந்தத் தடுப்பூசியைப் பெற்றுக்கொடுப்பது பொருத்தமானது எனவும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“நாட்டில் கொரோனாத் தொற்றால் குறுகிய இடைவெளியில் இரண்டு கர்ப்பவதி தாய்மார் இறந்தனர். இது தாய் இறப்பு விகிதத்தில் மிகப் பெரிய அதிகரிப்பாகும். அத்தோடு இது மேலும் அதிகரிக்கக் கூடும்.

இந்தநிலையில், கர்ப்பவதி பெண்களுக்குத் தடுப்பூசி செலுத்துவது இதனைத் தடுப்பதற்கான முக்கிய உத்திகளில் ஒன்றாகும்.

கொரோனாத் தொற்று நோய் பரவல் அதிகம் பதிவாகியுள்ள கொழும்பு, கம்பஹா, காலி மற்றும் கண்டி ஆகிய முக்கிய மாவட்டங்களில் தடுப்பூசி திட்டத்தை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும் எனப் பரிந்துரைக்கின்றோம்” - என்றார். (இ)

# கொரோனாவால் நாடு முற்றாக முடங்குமா? அத்தியாவசிய சேவைகள் தயார் நிலையில்

கொழும்பு, மே 12

நாட்டில் கொரோனா நோயாளர்கள் மேலும் அதிகரித்தால் நாட்டை முழுமையாக முடக்க வேண்டியிருக்கலாம் என்பதால் அத்தியாவசிய சேவைகள் அனைத்தும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

அத்துடன், அனைத்து அத்தியாவசிய சேவைகளையும் மட்டுப்படுத்தப்பட்ட பணியாளர்களுடன் தயார் நிலையில் இருக்குமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

அத்தியாவசிய சேவைகள் தொடர்பான ஜனாதிபதி செயலணியின் பிரதானி பஸில் ராஜபக்ஷ தலைமையில் அலரிமாளிகையில் அத்தியாவசிய சேவைகள் பணிக்குழுவுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் நாட்டில் காணப்படும் சுகாதார நெருக்கடி குறித்து தீவிரமாக ஆராயப்பட்டன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் தற்போது கொரோனா நோயாளர்கள் காணப்படுகின்றனர் எனத் தெரிவித்துள்ள சுகாதார அதிகாரிகள், கடுமையான சுகாதார வழிகாட்டுதல்களை நடைமுறைப்படுத்தாவிட்டால் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கலாம் எனவும், இது நாட்டின் சுகாதாரத்துறையினரின் மீது கடுமையான பாதிப்பை ஏற்படுத்தலாம் எனவும் தெரிவித்துள்ளனர்.

இந்தநிலையில், கொரோனா வைரஸ் பரவல் காரணமாக இம்முறை வெசாக் தினக் கொண்டாட்டங்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ள நிலையில், இவ்வாரம் முஸ்லிம்கள் நோன்புப் பெருநாளையும் வீடுகளிலேயே கொண்டாடுமாறும் சுகாதார அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர்.

நாட்டில் கடந்த நாட்களாக கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை என்றுமில்லாதவாறு அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ)

## மே 18 ஐ...

படியாக வடக்கு - கிழக்கு வாழ் தமிழ் மக்கள் அனைவரையும் விநயமாகக் கேட்டுக்கொள்கிறோம் என்று தெரிவித்து வடக்கு - கிழக்கு ஆயர் மன்றத்தால் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

போரில் பலியானோரை நினைவு கூரும் தினம் என்று குறிப்பிடப்பட்டு வெளியிடப்பட்டுள்ள குறித்த அறிக்கையில் திருகோணமலை மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு கி. நோயல் இம்மானுவேல், யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம், மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு இம்மானுவேல் பெர்னாண்டோ, மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு யோசப் பொன்னையா ஆகியோர் கையொப்பம் இட்டுள்ளனர்.

அந்த அறிக்கையின் முழு விபரம் வருமாறு: -

“மே மாதம் 18ஆம் திகதி இலங்கையின் வடக்கு - கிழக்கு வாழ் மக்களுக்கு முள்ளிவாய்க்கால் இனப் படுகொலையின் பன்னிரண்டாவது ஆண்டு நிறைவாகும். இறுதிப் போரின்போது பலியானவர்களுக்கு இறுதிக்கிரிகைகள்கூட செய்யமுடியாது புதைத்துவிட்டு தப்பிப் பிழைத்து வந்தவர்களும், அதற்குச் சாட்சிகளாக இருக்கும் ஏனையவர்களும் பலியானவர்களைக் கண்ணீரோடு நினைவு கூரும் நாளாகும். இறந்தவர்களை நினைவு கூரும் உரிமையுடைய நாளாகவும் அந்நாள் இருக்கின்றது. படுகொலைசெய்யப்பட்டவர்கள் அனுபவித்த வேதனைகளும் துன்பங்களும் விடுதலை வாழ்வுக்குத் தொடர்ந்து பங்களிப்புச் செய்கின்றன.

இழைக்கப்பட்ட குற்றங்களுக்கு நீதி கேட்டுப் போராடும் மக்களோடு இணைந்து வடக்கு - கிழக்கு ஆயர்களாகிய நாம் மே 18ஆம் திகதியை இனப்படுகொலையை நினைவுகூரும் நாளாகவும் செப நாளாகவும் அனுசரிக்கும்படியாக வடக்கு -கிழக்கு வாழ் தமிழ் மக்கள் அனைவரையும் விநயமாகக் கேட்டுக் கொள்கிறோம். அத்துடன் இலங்கையில் கடந்த பல தசாப்தங்களாக நடைபெற்ற போரிலும் குழப்பங்களிலும் தமது உயிர்களை இழந்த அனைவரையும் நினைவு கூர்ந்து செபிக்கும்படியாகவும் கேட்டு நிற்கின்றோம்.

அனைத்துப் பங்குத் தந்தையர்களையும், துறவறக் குழுமங்களையும், மத நிறுவனங்களுக்குப் பொறுப்பானவர்களையும் கொரோனா சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடித்து பின்வரும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

* எதிர்வரும் மே 18ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு ஆலயங்களில் மூவேளை செப மணியோசை எழுப்புதல்
* மக்களைச் செபிக்க அழைத்தல்
* ஈகைச் சுடர் ஏற்றுதல்
* இரண்டு நிமிட அக வணக்கம்
* இறந்தோர், பாதிக்கப்பட்டோர், துன்புறுவோரை நினைத்து மௌன செபம்
* மாலை 6.15 - இறந்தோரை நினைவுகூர்ந்து துக்க மணி ஒலித்தல்

இவ்வேளையில் மக்கள் தங்கள் இல்லங்களில் இருந்தவாறு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செய்யவும் செபிக்கவும் அறிவுறுத்தவும்” - என்றுள்ளது. (இ-03)

## கொரோனா...

- இவ்வாறு அபயராம விகாரையின் விகாராதிபதி முருத்தெட்டுவே ஆனந்த தேரர் நேற்று விசனத்துடன் தெரிவித்தார்.

ஆட்சியாளர்களை நம்பிய பொது மக்கள் இறுதியாக வீதிகளில் இறந்து கிடக்கும் நிலையை உருவாக்கிவிட வேண்டாம் எனவும் அரசை அவர் வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: -

“கொரோனா விடயத்தில் அரசு இப்போதும் பொய்யான தரவுகளையே கூறுகின்றது. ஆனால், அமெரிக்கவின் வொஷிங் டன் பல்கலைக்கழக அறிக்கையில் இலங்கையில் செப்டெம்பர் மாதமளவில் 20 ஆயிரத்துக்கும் அதிகமான கொரோனா மரணங்கள் ஏற்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தத் தரவுகள் அரசிடம் இருந்தாலும் அவர்கள் அதனை வெளிப்படுத்த மறுக்கின்றனர்.

இப்போதுள்ள நிலைமையில் நாட்டை முறையாக நிர்வகிக்காது விட்டால், ஊழியர்களை முறையாக வழங்க முடியாவிட்டால், குறைந்தது இரண்டு வாரங்களேனும் நாட்டை முடக்காது விட்டால் பாரதூரமான விளைவுகளை சந்திக்க நேரிடும்.

ஜனாதிபதி, பிரதமர், சுகாதார அமைச்சர் போன்றவர்கள் தூரநோக்குடன் இது குறித்து சிந்திக்காது போனால் இந்த நாடும் இந்தியாவைப் போன்றதொரு நிலைமையை அடையும். அவ்வாறான நிலையொன்றை உருவாக்க எம்மால் இடமளிக்க முடியாது” - என்றார். (இ)

## பெரும் இராணுவ...

குடியேற்றப்பட்ட சிங்கள மக்களில் ஒரு தொகையினர் எனப் பலர் கலந்து கொண்டனர் என்றும் தெரியவருகின்றது.

குருந்தூர்மலையில் சைவத் தமிழ் மக்களின் வழிபாட்டிமாக இருந்த ஆதிசிவன் கோயில் பகுதியை தொல்லியல் பிரதேசமாக தொல்லியல் திணைக்களம் அடையாளம் கண்டது. இதைத் தொடர்ந்து இடம்பெற்ற ஆய்வுகளை தொடர்ந்து அதனை பௌத்த விகாரை என்று குறிப்பிட்டது. ஆனால், அதற்கான ஆதாரங்கள் எவையும் பகிரங்கப்படுத்தப்படவில்லை.

இந்நிலையில், குருந்தூர்மலையில் விகாரை ஒன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று அப்பகுதி மக்கள் தெரிவித்திருந்தனர். ஆனால், நேற்றுமுன்தினம் இரவு அப்பகுதியில பெரும் எடுப்பிலான ஏற்பாடுகளுடன் பிரித் ஓதும் மதச் சடங்கு இடம்பெற்றது. இதில் சுமார் 30 பிக்குகள் பங்கேற்றனர்.

இதைத் தொடர்ந்து அதனை பௌத்த வழிபாட்டிடமாக மாற்றும் செயல்பாடுகள் நேற்று சம்பிரதாயபூர்வமாக இடம்பெற்றன. இதன்போது புத்த பகவானின் சிலை ஒன்றும் நிறுவப்பட்டதாகத் தெரிய வருகின்றது. புத்த பகவானின் இந்த சிலை, தொல்லியல் இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க அங்கு வருகை தந்தபோது, கொண்டு வரப்பட்டது என்றும், அந்தச் சிலையே வழிபாட்டுக்காக தொல்லியல் பகுதியில் நேற்று நிறுவப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

இதேவேளை, தண்ணிமுறிப்பிலிருந்து குமுழமுனை செல்லும் வீதியின் வீதிகள் தோறும் ஆயுதம் தாங்கிய படையினர் நிறுத்தப்பட்டிருந்தனர். அந்த வீதியால் பயணித்த தமிழ் மக்கள் சோதனை நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டனர். அப்பகுதியில் வயல்களுக்கு செல்லவும் தமிழ் மக்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை என்று தெரியவருகின்றது.

இதேசமயம், அங்கு குவிந்திருந்த இராணுவத்தினர் பௌத்த தேரர்கள், தொல்லியல் திணைக்களத்தினர் மற்றும் பங்கேற்ற சிங்கள பொதுமக்கள் எவரும் கொரோனா சுகாதார விதிகளை பின்பற்றவில்லை என்று முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் து. ரவிகரன் குற்றஞ்சாட்டியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இரவில்...

தெரியவந்தது.

எவ்வாறாயினும், அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடுவோருக்கு ஊரடங்கு உத்தரவு எந்த வகையிலும் பாதிப்பை ஏற்படுத்தாது எனவும் அறியமுடிந்தது.

மேலும், ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்படும் காலப்பகுதியில் பொருட்கள் கொள்வனவுக்காக வீடுகளில் இருந்து ஒருவர் மாத்திரமே வெளியில் சென்று வர அனுமதி வழங்குவதும், அடையாள அட்டையின் இறுதி இலக்கத்தின் அடிப்படையில் நாட்களை ஒதுக்கிக்கொடுப்பது தொடர்பிலும் அரசு அவதானம் செலுத்தி வருகின்றது எனவும் தெரிய வந்தது. (இ)

# மாகாணங்களுக்கு இடையே பயணக் கட்டுப்பாடு: குறுக்கு வழியில் எல்லை தாண்டுவோர் கைதாவர்

## பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண எச்சரிக்கை

கொழும்பு, மே 12

இலங்கையில் மாகாணங்களுக்கு இடையே நேற்று நள்ளிரவு முதல் பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுள்ள நிலையில், மாகாண எல்லைகளில் பாதுகாப்பைப் பலப்படுத்துவதற்குப் பாதுகாப்புத் தரப்பினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

மாகாண எல்லைகளின் ஊடான அனைத்து வீதிகளிலும் வீதித் தடைகளை அமைத்துப் பொலிஸாரும், இராணுவத்தினரும் சோதனை நடவடிக்கையில் ஈடுபடுவர் என்று பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இந்தக் காலப்பகுதியில் அத்தியாவசிய சேவைகளுடன் தொடர்புடையவர்கள், அரச மற்றும் தனியார் அலுவலகங்களின் ஊழியர்கள் தமது சேவை அடையாள அட்டையைக் காண்பித்து மாகாண எல்லைகளின் ஊடாக பயணிக்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும் தனிப்பட்ட தேவைகளுக்காக செல்வோர், உறவினர் வீடுகள், சுற்றுப் பயணங்கள் உள்ளிட்ட அத்தியாவசியமற்ற பயணங்களை மேற்கொள்வோருக்கு மாகாண எல்லைகளைத் தாண்ட அனுமதி வழங்கப்படாது என்றும் அவர் கூறியுள்ளார்.

குறுக்கு வழிகளின் மூலம் மாகாண எல்லைகளைக் கடந்து செல்வோர் மற்றும் சட்ட விரோதமான முறையில் மாகாண எல்லைகளுக்குள் நுழைவோருக்கு எதிராக குற்றவியல் மற்றும் தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பொலிஸ் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# நிறுவனங்களில் 25 வீதமானவர்கள் மட்டும் கடமையில் ஈடுபட வேண்டும்

## இல்லையேல் தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் சட்ட நடவடிக்கை என்கிறார் பொலிஸ் பேச்சாளர்

கொழும்பு, மே 12

நாட்டில் கொரோனாத் தொற்றுப் பரவலால் நிறுவனங்களில் 25 வீதத்துக்கும் அதிகமானவர்கள் கடமையில் ஈடுபடுத்தப்படுவது கண்டறியப்பட்டால், தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

அதற்கமைய நிறுவனத்தின் தலைவர் மற்றும் பணியாளர்கள் கைது செய்யப்படுவார்கள் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மாகாணங்களுக்கு இடையேயான போக்குவரத்து சேவைகளுக்கு நேற்று நள்ளிரவு முதல் தடை விதிக்கப்பட்டுள்ளது என்றும், மாகாண எல்லைகளில் கொரோனா பரிசோதனைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். (இ)

## வடக்கில் மேலும்...

சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 35 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 7 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 6 பேரும், வவுனியா மாவட்டத்தில் 7 பேரும் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

புதுக்குடியிருப்பு வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் சேர்க்கப்பட்ட ஒருவருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றுபவர்களிடம் எழுமாறாக முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையில் 6 பேருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட 6 பேருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட 6 பேருக்கும், பூவரசம்குளம் பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கும் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்ட 19 பேருக்கும், சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளில் 14 பேருக்கும், யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் இருவரும் என 35 பேருக்குக் கொரோனா நோய்த் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

அந்த வகையில், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட 6 பேருக்கும் , பருத்தித்துறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட 7 பேருக்கும், சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட 2 பேருக்கும், கோப்பாய் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட இருவருக்கும், ஊர்காவற்றுறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கும், தெல்லிப்பழை வைத்திசாலையில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கும், சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் சுயதனிமைப்படுத்தப்பட்டிருந்த 7 பேருக்கும், வேலணை பிரதேச சுகாதார மருத்துவ பிரிவில் ஒருவருக்கும், கரவெட்டி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் இருவருக்கும், நல்லூர் மற்றும் உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளில் தலா இருவருக்கும் எனத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது” - என்றார். (இ)

## நேற்றும்...

யல் பிரிவு நேற்றிரவு விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில்த் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 850 ஆக அதிகரித்துள்ளது. (இ)

## 7 பேரின்...

7 பேரையும் விடுதலை செய்வது தொடர்பாக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கவனம் செலுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது

ஸ்டாலின் தமிழக அரசின் தலைமை நீதிபதி சண்முகசுந்தரம், சட்டத்துறை அமைச்சர் ரகுபதி ஆகியோருடன் சென்னை ஆழ்வார்ப்பேட்டையில் உள்ள தனது இல்லத்தில் ஆலோசனை நடத்தியுள்ளார்.

7 பேரை விடுதலை செய்வது தொடர்பாக சட்டப்பேரவையில் மீண்டும் தீர்மானம் நிறைவேற்றுவது தொடர்பாக இந்த ஆலோசனைக் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

முன்னதாக மதிமுக பொதுச்செயலாளர் வைகோ, விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் உள்ளிட்ட அரசியல் கட்சித் தலைவர்கள் 7 பேர் விடுதலை தொடர்பாக தமிழக அரசை வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஈழநாடு
Eelanadu

# சுகாதார விதிமுறையை மீறி குருந்தூர்மலையில் இராணுவப் பாதுகாப்புடன் பௌத்த மயமாக்கல்!

## ரவிகரன் குற்றச்சாட்டு; நேரில் சென்று பார்வையிட்டார்

முல்லைத்தீவு, மே 12.

"தமிழர்களின் பூர்வீக இடமான முல்லைத்தீவு - குருந்தூர் மலையில் கொரோனா சுகாதார நடைமுறைகளை மீறி இராணுவப் பாதுகாப்புடன் பௌத்த மயமாக்கல் செயற்பாடு தீவிரமாக இடம்பெறுகின்றது. சுகாதார நடைமுறைகளை மீறிய இராணுவத்துக்கு எதிராக அரசின் நடவடிக்கை என்ன?"

- இவ்வாறு முன்னாள் வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

நேற்று குருந்தூர் மலைப் பகுதிக்குச் சென்ற ரவிகரன் மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் சின்னராசா லோகேஸ்வரன் ஆகியோர் அங்குள்ள நிலைமைளைப் பார்வையிட்டனர்.

இதன் பின்னர் ஊடகங்களுக்கு அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

குருந்தூர்மலையில் நேற்றுமுன்தினம் இரவு தொடக்கம் ஏதோ இடம்பெறுகின்றது என அப்பகுதி மக்கள் என்னிடம் முறையிட்டிருந்தனர். குறிப்பாக குமுழமுனை, ஆறுமுகத்தான்குளம் மற்றும் தண்ணிமுறிப்பு வயல்களில் வேலைசெய்கின்ற பொதுமக்கள் எனப் பலராலும் எங்களுக்கு இந்த முறைப்பாடுகள் கிடைத்தன.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் இரவு உடனேயே செல்ல முடியாத நிலையில், நேற்று குருந்தூர்மலைக்குச் சென்றிருந்தோம். அங்கு குருந்தூர் மலைக்குச் செல்லும் வழியில் ஆறுமுகத்தான் குளத்திலிருந்து கிட்டத்தட்ட நான்கு இடங்களில் இராணுவத்தினர் பாதுகாப்புக் கடமை களில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

அத்தோடு குருந்தூர் மலைக்கு நுழையும் வீதியில் குருந்தூர் மலைக்கு அண்மையில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த இரு இராணுவத்தினர் எம்மை அங்கு செல்லவிடாது தடுத்திருந்தனர்.

அப்போது குருந்தூர் மலைப் பகுதியிலிருந்து பத்துக்கும் மேற்பட்ட வாகனங்கள் வெளியேறிக் கொண்டிருந்ததையும் அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

இந்நிலையில், நாம் குருந்தூர் மலைக்குச் செல்லவேண்டும் என அந்த இராணுவத்தினரிடம் வலியுறுத்தியிருந்த நிலையில், குறித்த இராணுவத்தினர், தொலைபேசி அழைப்பு ஒன்றை ஏற்படுத்திவிட்டு உள்ளே செல்வதற்கு அனுமதித்திருந்தனர். அந்தவகையில், நேரடியாக நாம் குருந்தூர்மலை அடிவாரத்துக்குச் சென்றிருந்தோம். அங்கு தொல்லியல் திணைக்களத்தினரும், அதிகளவான இராணுவத்தினரும் குவிந்திருந்தனர்.

அங்கு நேற்றுமுன்தினம் பெரிய நிகழ்வு ஒன்று இடம்பெற்றமை குறித்தும் அங்கிருந்த இராணுவத்தினரிடம் கேள்வி எழுப்பியிருந்தோம். பௌத்த பிக்குகளும், வழிபாடுகளுக்குரியவர்களும், இராணுவத்தினரும் தான் அங்கு வருகை தந்தனர் என்று இராணுவத்தினர் பதிலளித்திருந்தனர்.

இந்நிலையில் நாங்கள் மலையடிவாரத்திலிருந்து, குருந்தூர்மலையின் மேற்பகுதிக்குச் செல்லவேண்டும், அங்கு நாம் எமது சமய வழிபாடுகளை மேற்கொள்ளவேண்டும் எனக் கேட்டபோது அவர்கள் அதற்கு மறுப்புத் தெரிவித்தார்கள்.

தமிழர்களின் பூர்வீக குருந்தூர் மலையை, சிங்கள மயப்படுத்தத் தீவிரப்படுத்தியிருக்கின்றார்கள். இது தவிர கொரோனா சுகாதார நடைமுறைகளுக்கு மாறாக யாராவது செயற்பட்டாலோ அல்லது முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை யாராவது செய்ய முற்பட்டாலோ தராதரமின்றி அனைவரையும் கைது செய்வோம் என்று இராணுவத் தளபதி அறிக்கைகளை வெளியிடுகின்றார். இவ்வாறிருக்க குருந்தூர் மலையில் கொரோனா சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாத இராணுவத்தினர் கைதுசெய்யப்படாதது ஏன்? அவ்வாறு சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாத இராணுவத்தினருக்குரிய நடவடிக்கை என்ன? - என்றும் கேள்வி எழுப்பினார். (இ)

# கொரிய தூதுவருடன் சட்டமா அதிபர் சந்திப்பு



கொழும்பு, மே 12

இலங்கையின் சட்டமா அதிபர் தப்புல டி லிவேராவுக்கும் கொரியத் தூதுவர் சங் துஷ் வூன்ஜின் ஜியோன்கிக்கும் இடையில் விசேட சந்திப்பு நேற்று இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பின்போது, இரு நாடுகளுக்கும் இடையிலான சட்ட தொடர்புகளை மேம்படுத்துவது மற்றும் இரு நாடுகளுக்கும் இடையேயான ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து கலந்துரையாடப்பட்டன என்று சட்டமா அதிபரின் ஒருங்கிணைப்பாளரும் அரச சட்டத்தரணியுமான நிஷார ஜெயரத்ன தெரிவித்தார்.

இதனிடையே, உயர்தரப் பாடத்திட்டத்தில் கொரியன் மொழியை வெளிநாட்டு மொழியாகச் சேர்க்க முடிவு செய்துள்ளதாகவும் கொரியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

அதன்படி, 2023ஆம் ஆண்டிலிருந்து ஜி.சீ.ஈ. உயர்தர மாணவர்கள் கொரிய மொழியைத் தேர்வு செய்ய அனுமதிக்கப்படுவார்கள்.

இந்த வருடம் முதல் ஜி.சீ.ஈ. உயர்தரப் பாடத்திட்டதில் வெளிநாட்டு மொழி தெரிவுகளில் கொரிய மொழியைச் சேர்ப்பதற்கு கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ்/டனான சந்திப்பின்போது முடிவு செய்யப்பட்டுள்ளது என்றும் கொரியத் தூதுவர் சங்துஷ் வூன்ஜின் ஜியோன்கி தெரிவித்துள்ளார்.

இதற்கமைய இந்த வருடம் முதல் உயர்தரத்தில் கொரிய மொழியைத் தெரிவு செய்து பரீட்சையில் சித்தியடைபவர்களுக்கு உள்நாட்டுப் பல்கலைக்கழகங்களுக்கான வாய்ப்பு வழங்கப்படவுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன் மூலம் இலங்கையர்களுக்கு கொரிய நாட்டில் தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர் கூறியுள்ளார்.

மேலும், கொரிய மொழியை ஜி.சீ.ஈ. உயர்தரப் பாடத்திட்டத்தில் உள்வாங்குவதற்கு இலங்கை அரசு இணங்கியுள்ளமை தொடர்பில் தாம் மகிழ்ச்சியடைவதாகவும் கொரியத் தூதுவர் குறிப்பிட்டுள்ளார். (இ)



# 'எதிர்க்கட்சியில் இருந்து சுவாசம்' திட்டம் தலைவர் சஜித் தலைமையில் ஆரம்பம்

கொழும்பு, மே 12

இலங்கையிலுள்ள மருத்துவமனைகளில் சுகாதார வசதிகளை மேம்படுத்தும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் இந்தத் திட்டத்துக்கு 'எதிர்க்கட்சியில் இருந்து சுவாசம்' எனப் பெயரிடப்பட்டுள்ளது.

நாட்டில் கொரோனா பரவல் தீவிரமடைந்ததைத் தொடர்ந்து, மருத்துவமனைகளில் சுகாதார வசதிகள் குறைவடைந்து வருகின்றது.

ஐக்கிய மக்கள் சக்தி மருத்துவமனைகளுக்கு சுகாதார உபகரணங்களை வழங்கி வந்தது எனவும், அதன் புதிய தொரு திட்டமே நேற்று கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது எனவும் எதிர்க்கட்சித் தலைவரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (இ)

# மரண அறிவித்தல்

மலர்வு 28 - 11 - 1952



உதிர்வு 06 - 05 - 2021

## வீரசிங்கம் சண்முகநாதன்

யாழ். புங்குடுதீவு 3 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ் La courneuve ஐ வசிப்பிடமாகவும் கொண்ட வீரசிங்கம் சண்முகநாதன் கடந்த (06.05.2021) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற வீரசிங்கம் - பொன்னம்மா தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்ற கனகசபை - நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும், கமாலதேவி (ராணி)யின் அன்புக் கணவரும், வாசுகி, ராசன், கோபி, சுரேன் ஆகியோரின் ஆருயிர் தந்தையும், பாலநந்தீஸ்வரன், அனுஷா, யாழினி, ஆகியோரின் அன்பு மாமனாரும், யோகநாதன் (சின்னமணி - சுவிஸ்), காலஞ்சென்ற தேவதாஸ் (சுவிஸ்), வரதராஜன் (சந்திரன் - சுவிஸ்), பரமேஸ்வரன் (பரமன் - சுவிஸ்), மனோகரன் (கர்னா - சுவிஸ்), சுசிலா (தங்கம் - சுவிஸ்), ஐங்கரமூர்த்தி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், இந்திராணி, ரோசாரி, தர்மநிதி, யோகாநிதி, ரஞ்சிதமலர், காலஞ்சென்ற சிவராஜா, சுஜாதா ஆகியோரின் அன்பு மைத்துனரும், அன்னலட்சுமி (மணி - பிரான்ஸ்), காலஞ்சென்ற கனகலிங்கம், பாக்கியராஜா (செல்வா - பிரான்ஸ்), காலஞ்சென்ற தனபாலசிங்கம் (பாலா - கனடா), விமலாதேவி, சிறிதரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற அச்சலிங்கம் (பிரான்ஸ்), சகுந்தலாதேவி (இலங்கை), மந்தாயினி (பிரான்ஸ்), சியாமளா (கனடா), அரியரட்ணம் (கனடா), சுகாசினி (இந்தியா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஹரிஷன், விஷாலன், திலக்ஷனா, மீரூஷா, துர்கா, யதுஷன், மீருஷன், தியாஷனா, தியாஷிகன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் எதிர்வரும் (17.05.2021) திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு 95 Rue Marcel Sembat, 93430 Villetaneuse, France என்னும் இடத்தில் தகனக்கிரியைகள் இடம்பெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு
ராசன் - மகன் +447981835565

தகவல்:
குடும்பத்தினர்

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 12.05.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.